பதனபத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்

SUPPLEMENT TO
THE HINDU ORGAN.

ஸ்தாபிதம் (1889ஆவணி௴ உ௰உ-இரப்பளைது)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—௪௮ } யாழ்ப்பாணம்:— தாது௵ ஆனி௴ ௧௰௨ (1936 ஜூன் 25) வியாழக்கிழமை { இலக்கம்—௨௨

ஸ்திரீகள் உடுக்கும் சீலைகள்

திரு. எஸ். மகாதேவா அவர்கள் எழுதியது

"இன்றைய பெண்மணிகளின் உடை
மேனாட்டுஉடைபோலுமில்லை; கீழ்நாட்டுஉடைபோலுமில்லை"

உடைகளைப்பற்றிய சரித்திரம் ருசிகரமானது. உடைகளைக்கொண்டு ஒருவன் எந்த இனத்தைச் சேர்ந்தவன் என்றும், அவனது மனோபாவம் எப்படி என்றும் கூறலாமல்லவா? உடம்பு எவ்வளவோ அழகாக விருப்பினும் அதை மூட நல்லவகையான துணிகள் அவசியம் தேவை. உடம்பின்மேல் துணிகளைப் போர்த்திக்கொள்வதிலும் அழகுஇருக்கிறது. ஆகவே பலநூற்றாண்டுகளாக ஏற்பட்ட மாறுதல்களின் பலனாக நாம் பற்பல விதமான ஆடைகளை இன்று அணிந்துகொள்கின்றோம். அதே சமயத்தில் இந்த உடைகளினால் நமது தேகத்திற்கோ அன்றிச் செய்கைகளுக்கோ இடைஞ்சலேற்படக்கூடாது.

* * *

இந்தியாவில் பற்பல விதமான உடைகளை நாம் காணலாம். வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே கன்னியாகுமரிவரை நாம் பிரயாணம் செய்வோமாகில், பலவித சீதோஷ்ண நிலைகளையும் அவைகளுக்குத் தக்க ஆடை ஆபரணங்களையும் காணலாம். இவ்வளவு விதமான ஆடைகளில் ஒரு விசேஷமென்னவென்றால், இந்தியாவெங்கும் மாதர்களின் உடை அடக்கம்தான். ஒரே புடவையைக் கொண்டு அவர்கள் சரீரம் முழுவதையும் மூடிக்கொண்டு அழகாகத் தோன்றுகின்றனர்.

* * *

புடவையின் பெருமையே பெருமை! கையால் செய்யப்படும் கதர்ப் புடவை முதல் மெஷினில் உற்பத்தியாகும் பனரிஸ் பட்டுச் சேலை வரை சகல புடவைத் தினுசுகளும் சிறப்பாகவே இருக்கின்றன. விதவிதமான வர்ணம், விதவிதமான கரைகள், விதவிதமான பூக்கள் முதலியவை நிறைந்தபுடவைகள், தேசத்தில் எவ்வளவோ நெருக்கடி ஏற்பட்டும் நீடித்திருப்பது ஓர் விசேஷமானதல்லவா? புடவை கட்டிக்கொள்வோரின் நடையும் புடவைக்கு ஓர் அழகைக் கொடுக்கிறது.

இந்திய மாதர்களின் புடவைத் தினுசுகள் நமது தீவுக்கும் வந்துவிட்டன. போர்த்துக்கேசர்! டச்சுக்காரர் முதலியோர் இத்தீவை முற்றுகைபோட்டுப் பிடித்த காலத்தில் இத்தீவு மாதர்களின் உடைக்கு ஆபத்து ஏற்பட்டது. தென்னிந்தியாவிலிருந்து இங்கு குடியேறினவர்கள் பிராமண ஸ்திரீகளைப் போலப் புடவை கட்டலாயினர்.

ஆனால் இன்றைய நிலைமை என்ன? மேனாட்டு நாகரீக வளர்ச்சி, சரித்திர ஆராய்ச்சியின்மை, மத நோக்கங்களின் உண்மை பற்றி அறியாமை, கலைஞானப் புறக்கணிப்பு, சமூகப் பழக்க வழக்கங்களை நிராகரித்தல் முதலியவை காரணமாக இளம்பிராயமுள்ளோரிடையே உடைபற்றி ஒரு விதமான கெட்ட எண்ணம் தோன்றிவிட்டது. அவர்களது உடை மேனாட்டு உடைபோலுமில்லை; கீழ்நாட்டு உடைபோலுமில்லை. இது வருந்தத்தக்கதே.

சாதாரணப் புடவையானாலும்சரி, மிக்க உயர்ந்த தினுசுப்புடவையானாலும் சரி, புடவைகட்டும் விஷயத்தில் மாறுதல் இல்லை. எந்த விதமான புடவையும் தோளின்மேல் போடப்பட்டு ஓர் தலைப்பு முதுகுப்புறத்திற் தொங்கவிடப்படுகிறது. சிலர் இந்தத் தலைப்பை முன்புறம் கொண்டுவந்து மடித்து இடுப்பில் சொருகிக் கொள்கின்றனர்; சிலர் அதை அப்படியேவிட்டுவிடுகின்றனர். எப்படியும் இம்மாதிரிப் புடவை கட்டிக் கொள்வதால், ஸ்திரீயின் அழகு பன்மடங்கு அதிகரிக்கிறது.

* *

தற்காலத்தில் சாதாரணமாகக் கரைகளுள்ள புடவைகளே அதிகமாக உபயோகிக்கப்படுகின்றன. சில புடவைகள் இருகரைகளுக்குமிடையே அழகிய பூக்கள் உள்ளன; சில 'பிளெயின்' ஆக (பூக்கள் இல்லாமல்) இருக்கின்றன. சில புடவைகளில் கரைகளும் பூக்களும் நெய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் மேனாட்டு மாதர்கள் உபயோகிக்கும் துணிகளுக்குக் கரைகளும் பூக்களும் கிடையா. அவர்கள் தத்தம் நாட்டிற்கு ஏற்றவாறும் தமது மேனியின் நிறத்துக்கேற்றவாறும் சேலைகளின் நிறத்தையும் தெரிந்துகொள்கிறார்கள். அவர்கள் சேலைகள் யார்க்கணக்கில் வெட்டப்பெற்றே விற்கப்படுகின்றன. இவ்வாறு விற்கப்படும் சேலைகள் தைத்து உடுத்தற்கே தகுதிவாய்ந்தவையன்றிச் சேலையாக உடுத்தற்கு ஏற்றனவல்ல. ஆயின் நம்நாட்டுக்குரியன சேலைகளேயாகும். இச்சேலைகளின் நிறங்கள் பெரும்பாலும் கறுப்பு, பச்சை, நீலம், சிவப்பு நிறங்களாகவே இருந்துவருகின்றன. இவற்றில் கரைகளும் சில முகப்பு வேலைகளும் செய்யப்பெற்றிருக்கும்.

* * *

சேலைகளை உடுப்பதில் நமது பெண்கள் நம் நாட்டு முறையைக் கையாடாமல், மேனாட்டாரைப் பின்பற்றித் தமது முறையை மறந்து ஏதேதோ லக்ஷணமற்ற முறையில் அவற்றை உடுத்துக்கொள்கின்றனர். சேலைகளின்முகப்பில்இடப்படும் அழகான வேலைகள் எவர்க்குந்தெரியக்கூடிய முறையில் விரித்து உடுக்கப் படுதற்காகவே கருதப்பட்டன. அதனை அறியாமல் நமது பெண்களிற் பலர் அம்முகப்புக்களைச் சுருக்கி அரையைச்சுற்றிவரிந்து கட்டிக்கொள்கின்றனர். நமது இலங்கைப் பெண்கள் சேலையுடுக்கும் முறை தெரியாமல் தமது பூர்வீகச் சிறப்பையும் மறந்து இயங்குவதைக் காண, அதில் நன்கு கைவரப்பெற்றவராகிய இந்தியப்பெண்மணிகளுக்கு வருத்தம் உண்டாகின்றது. மேனாட்டாரின் கலப்பால் எவ்வளவு தூரம் எமது மங்கையர் உடுப்புமுறை மாறிக்கொண்டது என்பதைக்காண அவர்கள் அதிசயிக்கின்றனர்.

நிமல லக்ஷணமு மியம லக்ஷணமு
  மாச னாதிவித பேதமும்
நேடிநு ணர்ந்திதய பத்ம பீடமிசை
  நின்றி லங்குமஜ பாநலத்
தியல றிந்துவளர் மூல குண்டலியை
  யினிதி றைஞ்சிஅவ ளருளினால்
எல்லை யற்றுவளர் சோதி மூலவனல்
  எங்கள் மோனமனு முறைநிலை
வயமி தந்துவரு மமிர்த மண்டல
  மதிக்குளே மதியை வைத்துநான்
வாய்ம டுத்தமிர்த வாரி யைப்பருகி
  மன்னு மாரமிர்த வடிவமாய்ச்
செபமி குந்துவரு சித்த யோகநிலை
  பெற்று ஞானநெறி அடைவனோ?
தெரிவ தற்கரிய பிரம மே!அமல
  சிற்சு கோதய விலாசமே.

—தாயுமானசுவாமிகள்.

வரகவி சுப்பிரமணிய பாரதியார்

அவர்கள்,

தம் ஞானகுருவாகிய ஸ்ரீநிவேதிதாதேவியின்

துதியாகப் பாடியது.

அருளுக்கு நிவேதனமாய் அன்புக்கோர் கோயிலாய்
  அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறாய் எமதுயர்நா டாம்பயிர்க்கு
  மழையாய் இங்கு
பொருளுக்குவழியறியா வறிஞர்க்குப்பெரும்பொருளாய்ப்
  புன்மைத் தாதச்
சுருளுக்கு நெருப்பாகி விளங்கியதாய் நிவேதிதையைத்
  தொழுது நிற்பேன்.

பறையர் என்பது மரியாதையற்ற பதமா?

1917-ம் ஆண்டில் வரகவி சுப்பிரமணிய பாரதியார் எழுதியது

"பறையர் ஹிந்துக்கள்; அவர்களைக் கைதூக்கிவிட்டு மேல் நிலைக்குக் கொண்டுவருவது நம்முடைய தொழில்"

பறையர் என்பது மரியாதையுள்ள பதம் இல்லையென்றுகருதி இக்காலத்தில் சிலர் பஞ்சமர் என்ற சொல்லை அதிகமாக வழங்குகிறார்கள். நானும் சில சமயங்களில் பஞ்சமர் என்றசொல்லை வழங்குவதுண்டு. ஆனால் பறையர் என்பதே மேற்படி ஜாதியாருக்குத் தமிழ் நாட்டில் இயற்கையாக ஏற்பட்ட பெயர். பறை என்பது பேரிகை. பூர்வகாலத்தில் நமது ராஜாக்கள் போர் செய்யப் போகும் போது ஜய பேரிகை கொட்டிச் செல்லும் உத்தமமான தொழிலை இந்த ஜாதியார்செய்து வந்த படியால் அவர்களுக்குஇப் பெயர் வழங்குவதாயிற்று. அது குற்றமுள்ள பதம் இல்லையென்பதற்கு ருஜு வேண்டுமானால் ஷை கூட்டத்தாரால் சென்னையில் நடத்தப்படும் சபைக்குப் "பறையர் மஹா சபை என்னும்" பெயர் வைத்திருப்பதைக் காண்க. அவர்களைமிருகங்களைப் போல் நடத்துவது குற்றமேயொழியப் பறையர் என்றுசொல்வது குற்றமில்லை.

நந்தனாரையும் திருப்பாணாழ்வாரையும் மற்றஹிந்துக்கள் கும்பிடவில்லையா? பறையருக்கு நியாயம் செலுத்த வேண்டியது நம்முடைய முதற்கடமை. அவர்களுக்கு முதலாவது வேண்டியது சோறு. சென்னபட்டினத்துப் பட்லர்களைப் பற்றிப்பேச்சில்லை. கிராமங்களிலுள்ள பண்ணைப்பறையரைப்பற்றியே பேச்சு. அவர்களையெல்லாம் ஒன்றுதிரட்டி உடனே விபூதி நாமத்தைப் பூசு, பள்ளிக்கூடம் வைத்துக்கொடு. கிணறு வெட்டிக்கொடு. இரண்டுவேளை ஸ்நானம் பண்ணச்சொல்லு. (புலால் உணவை ஒழிக்கச்சொல்லு) அவனோடு சமத்துவம்கொண்டாடு நான் இதை நெடுங்காலமாகச் சொல்லிவருகிறேன். அவர்களையெல்லாம உடனே ஒன்றுசேர்த்து இந்து தர்மத்தை நிலைக்கச் செய்யுங்கள். நம்முடைய பலத்தைச் சிதற விடாதேயுங்கள். மடாதிபதிகளே! நாட்டுக்கோட்டைச்செட்டிமார்களே! இந்த விஷயத்தில் நீங்கள் பணத்தைவாரிச் செலவிடுங்கள். இது நல்ல பயன் தரக்கூடிய கைங்கரியம். தெய்வத்தின் கருணைக்குப் பாத்திரமான கைங்கரியம்.

பறையனைப் பறை (ஆதிசக்தி முத்துமாரி) யின் மக்களென்றும் பொருள் சொல்வதுண்டு. நமக்கு மண்ணுழுது நெல்லறுத்துக் கொடுக்கிற ஜாதியாரை நாம் நேர்மையாய் நடத்த வேண்டாமா? அது சரிதான். இனிமேல் பறையன் கைநீட்டாமல் இருப்பதற்கு வழி தேடிக் கொள்ளுங்கள். சென்ன பட்டினத்திலே நாலு பட்லர்கள் ஹிந்து மதத்தை உல்லங்கனம் செய்த போதிலும் நாட்டிலுள்ள பறையர் எல்லாரும் உண்மையானஹிந்துக்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. எனக்கும் ஒரு வள்ளுவப் பையனுக்கும் சிநேகம். அவனுடைய கோயில் அம்மன் மீது நான் பாட்டுக் கட்டிக் கொடுத்தேன். அவன் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவதுண்டு; அவன் காத்தவராய ஸ்வாமி வேதத்திலே சொல்லிய காற்றுக் (வாயுக்) கடவுளே யன்றி வேறில்லையென்று அந்தப் பாட்டுக்களினாலே தெரிந்து கொண்டேன். முத்துமாரி யென்ற பராசக்தியுடைய பிள்ளைதான் காத்தவராயன். பறையர்களும் நம்மைப் போலவே வைதிக தேவர்களைப் பூசிக்கிறார்கள்.

"அங்கமெல்லாம் குறைந்தழுகு
  தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும்
  புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்
  கன்பராகில்
அவர்கண்டீர் யாம்
  வணங்கும் கடவுளாரே"

பறையர் ஹிந்துக்கள். அவர்களைக் கை தூக்கிவிட்டு மேல் நிலைமைக்குக் கொண்டு வருவது நம்முடைய தொழில்.

—லோகோபகாரி

இத்தாலி - ஜெர்மன் வர்த்தக ஒப்பந்தம்.

ரோமாபுரி ஜூன் 21

இத்தாலிக்கும் ஜெர்மனிக்கும் ஓர் வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக ஓர் அரசாங்க அறிக்கை சொல்லுகிறது. அது புதன்கிழமையன்று கையெழுத்திடப்படும். அதைப்பற்றிய விவரங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை.

பந்தயக் குதிரைக்கு விஷம்

நல்லவேளையாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

சில தினங்களுக்குமுன் திம்பிரிகலாயாவிலுள்ள திரு. ஏ. செல்வரத்தினத்துக்குச் சொந்தமான பந்தயக் குதிரைகளின் லாயத்தில்குதிரைகளுக்கு விஷமூட்ட முயற்சிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. அந்தக் குதிரைலாயத்தில் 21- குதிரைகளிருக்கின்றன. அவைகளுள் நான்கு குதிரைகள் திரு. செல்வரத்தினத்துக்குச் சொந்தமானவை. இவ்வருஷத்தில் நடந்த அநேக பந்தய ஓட்டங்களில் இவரது குதிரைகள் வெற்றிபெற்றிருக்கின்றன. இதனால் பொறாமைகொண்ட யாரோ ஒருவர் அந்தக் குதிரைகளுக்கு விஷமூட்ட முயற்சித்ததாகக் கூறப்படுகிறது.

குதிரைகளுக்கு வைக்கப்படுந் தீனியில் விஷம் போடப்பட்டிருந்ததாம். நல்லவேளையாக அந்தத்தீனி குதிரைகளுக்கு வைக்கப்படுமுனர் திரு. செல்வரத்தினம் கண்டுபிடித்துவிட்டார்.

அவர் உடனே பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார். அந்தலாயத்திற்கருகிலுள்ள புல்வெளி வழியாக அந்த மனிதன் குதிரைகள் தீனி அறைக்குச் சென்றிருக்க வேண்டுமென அங்கு காணப்பட்ட காலடிச்சுவடுகளால் யூகிக்கப்படுகிறது. திரு செல்வரத்தினம அந்த லாயத்தை மிக்க பந்தோபஸ்தில் வைத்திருக்கிறார்,

இடியால் மரணம்

3 பேர் இறந்தனர்.

மதுவாணி, ஜூன் 18—

வீட்டுக்கு வந்துகொண்டிருந்த பிதில் ஜாஹின்பூர் கிராமவாசிகளிருவர் இடிவிழுந்து இறந்தனர். பாலமாஜில்லாவில் பிர்மாவால் என்ற கிராமத்தில் ஒருவர் மரத்தடியில் தங்கியிருந்தபோது இடியால் தாக்குண்டு இறந்துபோனார்.

விவாகம்.

சின்னத்தம்பி-சிவக்கொழுந்தம்மாள்

சென்ற திங்கட்கிழமை யன்று (22—6—36) 9 - மணிக்கு மேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் வட்டுக்கோட்டை ஸ்ரீ. சபாபதி பிள்ளையவர்களின் புதல்வரும் மேற்படியூர்த் திருஞானசம்பந்தவித்தியாசாலை யாசிரியருள் ஒருவருமாகிய ஸ்ரீ. சின்னத்தம்பியவர்கட்கும், வண்ணார்பண்ணை மேற்கு ஸ்ரீ. மார்க்கண்டரவர்களின் கனிஷ்ட புத்திரி ஸ்ரீமதி. சிவக்கொழுந்து அம்மாளுக்கும் மணமகன் இல்லத்திலே வைவாகசோபனம் சிறப்பாக நிறைவேறியது. தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும்பெற்று இன்புற்றினிது வாழும் வண்ணம வாலாம்பிகை சமேத வைத்தீசுவரப்பெருமான் திருவருள் பாலிப்பாராக.

அபிஸீனிய சக்ரவர்த்தி

இந்திய மக்களுக்குச் செய்தி

லண்டன் ஜூன் 7

32 மாதர் சங்கத்தார் சேர்ந்து அபிஸீனிய சக்ரவர்த்திக்கும் இளவரசிக்கும் ஒரு உபசாரம் நடத்தினார்கள். பல இந்திய ஸ்திரீகள் உபசாரத்திற்கு வந்திருந்தனர். இந்தியமக்களுக்குச் சக்ரவர்த்தி விடுத்த செய்தியாவது:

இவ்வுபசாரத்திற்கு இந்திய ஸ்திரீகள் பலர் வந்திருப்பது திருப்தியையளிக்கிறது. எங்களிடம் காட்டிய நல்லெண்ணத்திற்காக நாங்கள் இந்தியருக்கு வந்தனம் தெரிவிக்கிறோம்.

இளவரசி சாஷி கூறியதாவது: எங்களிடம் காட்டிய நல்லெண்ணத்திற்காக இந்தியருக்கெல்லாம் நானும் வந்தனம் தெரிவிக்கின்றேன். அவர்கள் அன்பை உயிருள்ள வரையில் நான் மறக்கமாட்டேன்.

புதிய அதிகாரப் பட்டம்

நாகநாத அதிகாரம் அவர்கள் வாலாற்றுக் குறிப்புகள்

திரு. நாகநாத அதிகாரம் அவர்கள்.

எங்கள் புதிய அதிகாரப்பட்டவர்த்தனராகிய ஸ்ரீமான் சூரியகுமார சிச்சிங்க சேனாதிராச அம்பலவாணநாகநாதப் பெருந்தகையார் நமது நாட்டுக்கு ஓர் நிஷ்களங்க பூர்ணசந்திரனாக விளங்குகின்றார். எவரும் போற்றிக்கொள்ளும் சீர்மையும் சத்தியம் தண்ணளி பொறுமை தைரியம் வீரம் நேர்மை முதலிய உத்தம குணங்களும் ஒருங்கமையப் பெற்றவர்; தருமபூஷணர்; சரஸபாஷணர்; இன்முகவிலாசர்; செம்மனச் செல்வர்; திருமகள் கடாக்ஷ வீக்ஷண்ணியர்.

மரபு

வலம்புரியீன்ற நலம்புரி முத்தென இருமரபுந்தூய பெருங்குடிப்பிறப்பினர். பூர்வகாலத்தில் இலங்கையின் வடபாலாண்ட ஆரியச் சக்கரவர்த்திகளும் குறுநிலமன்னர்களாகிய வன்னியர்களும் 15ம் 16ம் 17ம் நூற்றாண்டில் விளங்கிய நிலப்பெருங்கிழமைக் கிராமப்பதிகளும் எம் அதிகாரமவர்களது குல முதல்வராவர்; உலாந்தாவேந்தரின் கீழ் அமைச்சராய் அமர்ந்து தன்மைபெற்று விளங்கிய சண்முகநாயக முதலியார் அம்மன்னர் கட்டளையிட்டும பசுவதை ஆஞ்ஞாபத்திரத்துக்குக் கைச்சாத்திடச் சம்மதப்படாது அப்பதவியைத் துறந்த புண்ணியசீலர். எங்கள் அதிகார் அவர்கள் மேற்படி சண்முகநாயக முதலியாருடைய சந்ததியைச் சேர்ந்தவர். இவர் பேர்பெற்ற தமிழ்ப்பிரபுவாகிய சூரியகுமார சிச்சிங்க சேனாதிராச முதலியாரது பௌத்திரரின் புத்திரராவர். காலஞ்சென்ற கோப்பாய் அம்பலவாண மயில்வாகனமவருக்கும் பிரசித்திபெற்ற குமாரசூரியருக்கும் நெருங்கிய பந்துவாவர். பிரபல ஆங்கில வைத்தியராகிய ஸ்ரீமான் சுப்பிரமணியம் அவர்களும், சுந்தரோடை ஆங்கில வித்தியாசாலை ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாயர் அவர்களும் இவருடைய நெருங்கிய சுற்றத்தவர்களே. கண்டியில் இருக்கும் நாஷனல் வங்கியிலே சிரேஷ்ட சிறாப்பராக அமர்ந்திருக்கும் ஸ்ரீமான கனகநாயகமவர்கள் இவருடைய ஏகபுத்திரர்.

"விளையும் பயிர்"

தமது அதிகாரமவர்கள் வாழையடி வாழையெனவந்த தமது குலமரபிற்கேற்ப இளம் பிராயத்திலேயே புண்ணியகுணங்களையும் நுண்ணியமதியும் திண்ணிய புத்தியும் தளராதவூக்கமு முடையராய் கமத்தொழிற் பயிற்சியும் செந்தமிழ்க் கல்வியும் ஆங்கிலஞானமுங் கைவரப்பெற்று 'மகன்றந்தைக்காற்று முதவி யிவன்றந்தை யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்' என்ற குறளுக்கு இலக்கியமாக விளங்கினார்.

உத்தியோகம்

'உத்தியோகம் புருஷலக்ஷண' மென்ற முதுமொழிக்கேற்ப நமது அதிகாரவர்கள் இலங்கையின் தென்பாலேகி, 'ஒறியன்றல் பாங்கிங் கோப்பரேஷன்', 'நியூ ஒறியன்றல் வங்கி', 'நாஷனல் வங்கி' முதற் பலவாகக்கிடந்த நிதி சேம ஸ்தாபனங்களுக்குக் கல்லாராயமர்ந்து 34 ஆண்டுகளாக உத்தியோகம் நடாத்தினர். அக்காலையில் ஐரோப்பியர் பறங்கியர் சிங்களவர் தமிழர் முதலாகப் பலதிறப்பட்ட சீரிய மக்களுடன் கலந்தளவளாவும சந்தர்ப்பம் நமது அதிகாரமவர்களுக்கு வாய்ப்புற்றது. அவர்களது மனப்பான்மைகளையும் கொள்கைகளையும் ஆசாரங்களையும் நுணுகியாராய்ந்து அன்னப் பறவைபோலத் தள்ளுவதள்ளிக் கொள்ளுவ கொண்டு தம்மையும் தமிழ் மக்களையும் செம்மைசெய்து சீர்திருத்து நற்குபகாரமாக்கினர்.

முதலியார்ப் பட்டம்

அதிகாரமவர்கள் பெருங் கமக்காரராதலால் உத்தியோகத்தோடொப்ப விவசாயத் தொழிலினும் நாட்டங்கொண்டு அதன் அபிவிருத்தியில் ஈடுபட்டு விவசாயப்பொருட் காட்சிச்சாலைகள் பல ஆங்காங் கேற்படுத்திப் பரிசில் வழங்கி விவசாயிகளை உற்சாகப்படுத்தினார். இன்னோரன்ன தேச சேவைகளையும் ராசசேவைகளையும் பாராட்டி ராஜாங்கத்தார் 1903-ம் ஆண்டில் அதிகாரமவர்களுக்கு முதலியார்ப்பட்டமும 1907இல் சமாதான நீதிபதி (J. P. கௌரவ நீதிபதி U. P. M) என்னும் பட்டங்களுங் கொடுத்து 1916-ம் ஆண்டில் வாசல் முதலியார்ப்பட்டமும் கொடுத்துச் சிறப்புச்செய்தனர்.

1915 இல் தென்னிலங்கையிலே சாதிக்கலகம் எழுந்த சமையத்திலே காதுறைபாவிலே நிறுவப்பட்ட இராணுவ ஸ்தானங்களுக்குப் பொலிஸ ஸ்தானங்களுக்கும் கருமத்தலைவராக அரசினரால் நியமிக்கப்பட்டு அப்பதவியின் சிக்கலான கருமங்களை மிக்க ஆற்றலோடும் சதுரப்பாட்டோடும் நடத்திச் சீர்செய்த தீரராவர் நமது அதிகாரமவர்கள். துரெலிக் கலக விசாரணைத் தலைவர் அதிகாரமவர்கள் செய்தசேவைகளால் திருப்தியுற்று வியந்து புகழ்ந்தனர்.

சமரஸம்

அதிகாரமவர்கள் 40 வருஷம் நுவரெலியாவிலிருந்த காலத்தில் மிக்க செல்வாக்கும் தண்ணளியும் மாதுரிய வாக்குச் சாதுரியமும் படைத்து விளங்கிய சான்றோராதலால் தோட்டத்துரைகளுக்கும் கூலிகளுக்கும் பிணக்குகள் நேருங்கால் அவைகளைச் சமரசப்படுத்தவார்.

கண்டி, தொப்பிதோட்டம், நுவரெலி நீதிஸ்தலங்களினின்று வரும் விவகாரங்களில் வாதிப்பிரதிவாதிகளுக்குச் சமாதானத் தீர்வை செய்து சமரசமாக்கினர். அதனால் அதிகாரமவர்களது பேரும் பெருமையும் சீருஞ் செல்வாக்கும் பரவலாயின.

அரசினர் கொளுக்கிப்பூச்சிச் சிகிச்சை முதல் தொடங்கிய காலத்திலே தோட்டக் கூலிகள் அம்மருந்தை விஷமென்றெண்ணி உட்கொள்ள மாட்டோமென்று பிடிவாதஞ்செய்ய அரசினர் வேண்டியபடி தோட்டத் துரைமார் செய்வதறியாது திகைத்து நிற்ப அதிகாரமவர்கள் கூலிகளைக் கண்டு பேசி வசீகரித்து உடன்படச் செய்து உட்கொள்ளுவித்தனர்.

இளைப்பாறுதல்

இவ்வாறே அந்நிய நாட்டிலே பலரும் பாராட்டுஞ் சீராட்டுஞ் செல்வப் பெருக்கும் பெற்று திலகமாய் வீற்றிருந்த அதிகாரமவர்கள் உத்தியோகத்தினின்று பொருசித் தமது ஜனனபூமியாகிய கோப்பாயிலே வாசஞ்செய்வாராய் வயோதிகத்தளர்வும் சோம்பலும் சலிப்புமின்றிப் பொருளாதாரத் துறைகளிலும் ஜனதசமூகத் துறைகளிலும் தேசகைங்கரியஞ் செய்து வருகின்றார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே மாவரித்திட்டத்தை முன்னர் ஆராய்ந்து புதிது கண்ட மதியூகியும் அதிகாரமவர்களே. அத்திட்டத்தை நிறைவேற்றும்படி அரசினரும் குடிகளும் மெச்ச ஒரு விஞ்ஞாபனத்தைத் சித்தஞ்செய்து சமர்ப்பித்ததுமவர்களே.

தொடர்ச்சி 7ம் பக்கம்.

கடிதம்

கனம் இந்துசாதனப்பத்திராசிரியர் அவர்களுக்கு:—

ஐயா!

மக்களின் ஆன்மார்த்தங் கருதித் தப் பெரியோர்கள் ஆங்காங்கு கோவில்களைக்கட்டி அதற்குரிய விதிகளையும் அமைத்து வைத்தார்கள் ஆனால் அதை உணர்ந்தோ உணராமலோ இக்காலத்திற் சிலர் அக்கோவில்களைத் தங்களது அருவருக்கத்தக்க ஆடல், பாடல் முதலிய களியாட்டங்கட்குரிய இடமாக வைத்து நடத்து வருகின்றார்கள். அவர்கள் முன்னிலையில் எத்தனைய சிவபக்தி அடியார் பக்தியிற் சிறந்த சான்றோர்களும் தக்கவாறு அவமதிக்கப்பட்டு வருகின்றார்கள். சமீபத்தில் இத்தகைய சம்பவமொன்று வேலணைப் புளியங்கூடல் மாரியம்மன் கோவிலிலும் நடைபெற்றது.

சென்ற 14-6-36 ம் நாளில் அக்கோவிலின் அன்றைய விழாக்காரர் ஒரு விளம்பரம் விட்டிருந்தார்கள். அதில் "ஸ்ரீபதி புளியங்கூடலில் எழுந்தருளி இருக்கும் மாரியம்மன் கோவிலில் அருணகிரி சுவாமிகள் சரிதை பாடலும் பயனும் சில தத்துவார்த்தங்களுடன் உபந்நியாசஞ் செய்யப்படும்" என்று எழுதப்பட்டிருந்தது. அதன்படி பிரசங்கத்தைக்கேட்பதற்குப்பல பக்தர்களும வந்தார்கள் பிரசாரகரும வந்தார் பிரசங்கமும் சுமார் 7 மணிவரையில் தொடங்கியது. ஆனால் பிரசங்கர் தொடங்கி அருணகிரி சுவாமிகள் சரித்திரத்தில் "முருகக் கடவுள் அருணகிரி நாதருக்குக் காட்சி கொடுத்துத் தன்னைப்பாடுக என்றார்" என்பது வரையில் போய்க் கொண்டிருக்கையில் இருவர் தடித்தனமாகப் பிரசாரகர்க்கு முன் இருந்தமேசையை அப்புறப்படுத்தி விட்டார்கள். பிரசாரகரும் உடனே என்னசெய்வதென்றறியாது அந்த அளவில் தமது பிரசங்கத்தை இடையில்நிறுத்தி அருகில்உள்ள மடத்திற் போய் நின்றுகொண்டார். சனங்கட்கிடையிலோ ஆரவாரமும் அமைதியின்மையும் ஏற்பட்டுவிட்டது. விஷயம் என்ன என்றால் அப்பிரசங்கத்தையேற்படுத்திய அவ்விழாக்காரருக்குத் திடீரெனப் புத்திவந்ததுபோல அவர்கள் அப்பேச்சுநேரத்தில் சின்னமேள ஆட்டத்தை ஆட்டுவிக்க எடுத்துக்கொண்டமையேயாகும்.

ஐயா! அப்பிரசங்கத்தைச் செய்த பெரியாரிடத்தும், அவர்தாம் குறித்துப் பேசிவந்த பெருமானிடத்தும் அங்குச் சமூகந்தந்த சைவப்பெரியரிடத்தும், அக்கோவில் சந்நிதானத்தில் அவர்கள் எவ்வளவு மரியாதையாக நடந்துகொண்டார்கள் என்பதைப்பாருங்கள்.

பிரசங்கம் செய்விப்பதையே முன்னர் ஒழுங்கு செய்யாமல் இருக்கலாம் அன்றேல் ஒழுங்கு செய்த விளம்பரத்தில் வெளியிட்டபடி அப்பிரசங்கத்தை முற்ற முடிய நடக்க விட்டிருக்கலாம். அன்றி இடையில் நிறுத்தவேண்டியது அவசியமென்று கண்டால், அப்பிரசாரகர்க்கறிவித்து அவர்க்கும் அவர் முன்னிலையில அப்பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கும் பக்தர்கட்கும் பொருத்தமும் திருத்தமுமான முறையில் மரியாதையாகக் கூறிச் சமாதானமாய் அதை நிறுத்தி யிருக்கலாம். பல்வேறு தேயத்துப் பொதுச்சனங்களும் வந்து வழிபடுகின்ற ஒரு பகிரங்கமான கோவிலில் ஒரு திருவிழா எடுத்து நடத்துகின்ற பொறுப்புள்ளவர்கள் அந்தஅளவேனும் சனசமூக நாகரிகத்தை அறிந்து நடந்துகொள்ளல் அவசியமேயாகும்

விளம்பரத்தில், பிரசங்கம் மட்டும் நடப்பதாக அறிவித்துவிட்டு, அவ்விதம் அறிவிக்கப்படாத சின்னமேளத்தை அப்பிரசங்கநேரத்தில் வைத்தமை எதற்காக என்பது தெரியவில்லை? அது இவ்விதமான களியாட்டங்கட்கஞ்சி ஒதுக்கிடந்தேடி இருக்கும் சைவப் பெரியார்களையும் வரவழைத்து அவர்கட்கு அவ்வழகான சின்னமேளக் காட்சியைக் காட்ட எண்ணிய சூழ்ச்சியே போலும்.

தெய்வ சிலையையும் சைவதலத்தையும் பொருட்படுத்தாத ஒருவித மனப்போக்குள்ளவர்களின் சேட்டை கோவில் சந்நிதானத்தில் எவ்வளவு தூரம் இடம்பெறுகின்றதென்பதைப் பாருங்கள் இத்தகைய துர்ச் செய்கைகள் தானே எம் கோவில் ஒழுக்கத்தில் மற்றவர்களால் குறை கூறும்பகுதியாக இன்றும் இருந்து வருகிறது. அவர்கள் சின்னமேளத்தை மதித்த அளவு அப்பெரியாரையும் அவர் தம பேச்சையும் பொருளையும் மதிக்கவில்லை.

ஐயா! இக் கோவில், முன் ஆடு கோழிகளை வெட்டி வந்ததாகப் பின் கொலை யொழுக்கத்தை நீக்கிய சீர்திருத்தக் கோவிலாகும்என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்ஙனம்,
ஒரு சைவாபிமானி.

பலஸ்ரயின் கலகம்

17 - 6 - 36.

பிருத்தானிய பொலிஸ் ஒரு போட்டரதத்தின் காவலாகப் பட்டினத்தைப் பார்த்துக்கொண்டு போகும்போது யாபா என்னும் பட்டினத்தில் அராபியர் காத்திருந்து வழிமறித்துப் பொலிசாரைத் தாக்கினர். பொலிசார் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தபோது ஒரு அராபியன் மாண்டான் என்று சொல்லப்படுகின்றது.

காசா என்னும் தானத்திற்கு அணித்தாகவும் ஜெருசலேமுக்குச் சமீபத்திலுள்ள ஒரு பாலத்திற் கணித்தாகவும் கலகக்காரர் புகையிரதத்திற்கு வெடிகுண்டிட்டுப் பெருஞ்சேதத்தை யுண்டாக்கினர்.

பெரிய யானைத்தந்தம்

இலங்கையிலே மிகவும் பெரியன என்று சொல்லத்தக்க ஒரு "சோடி" யானைத்தந்தங்கள் ஏலத்தில் விற்கப்பட்டபோது, காலிப் பிறக்டர் W. றிச்செட் டீ. சில்வா என்பவர் அவைகளை 6000 ருபாவாக விலைக்குவாங்கினர். இத்தந்தத் தனித்தனி 9அடி நீளமுள்ளனவும் இரண்டின்நிறை 250 றுத்தலாம்.

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக்குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை யான் விளம்பரத்தில்உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு,சாலா முஸ்லி, சப்பேமுத்ஸலிமிஸ்தான், சார்ப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை,பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்,

சிங்கப்பூரினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
வெஞான ஆரோக்கிய சுகாதார
வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு.
Y46 1-1-36 to 31-12-36) ஸிலோன்.

மன்னர் ஜெனன தினக் கொண்டாட்டம்

திரு. நாகநாத முதலியாருக்கு அதிகாரப்பட்டம்

திரு. கந்தையாச் செட்டியாருக்கு "முகாந்திரம்"

நேற்று முன்தினம் மன்னர் பிறந்த நாட் கொண்டாட்டமாகும். இக்கொண்டாட்டத்தின்போது, இலங்கையிற் பலருக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன. அவற்றுள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பின்வரும் பிரபுக்களுக்கு முகாந்திரம், அதிகாரம், ஜே. பி. என்னும் பட்டங்கள் வழங்கப் பெற்றன.

அதிகாரப்பட்டம் திரு. நாகநாதமுதலியார் அவர்களுக்கும், முகாந்திரப்பட்டம் திரு. C. S. K. கந்தையாச் செட்டியார் அவர்களுக்கும், திரு. அரியநாயகம்பார்துமாதுல சிங்கிக்கும்; ஜே. பி. பட்டம் திரு. டி. எச். துரோசெட் அவர்களுக்கும் வழங்கப்பட்டன.

இம்முறை, அதிகாரப்பட்டம் திரு. நாகநாதமுதலியார் ஒருவருக்கே அளிக்கப்பட்டிருக்கிறது. திரு. நாகநாதமுதலியாரது வாலாற்றுக் குறிப்பை இந்றைப்பிரசுரத்திற் பிறிதோரிடத்திற் காண்க.

திரு. கந்தையாச் செட்டியார் யாழ்ப்பாணத்திற் பிரபல வர்த்தகர் இவருக்குச் சொந்தமாக ஒருதேங்காயெண்ணெய்ஆலையும் அரிசி ஆலையும் இருக்கின்றன. யாழ்ப்பாணத் தமிழ் வர்த்தகர்களில் இவர்தான் முதல் முதல் முகாந்திரம் பட்டம் பெறுகிறர். இவர் கோட்டடி நமசிவாய வித்தியாசாலையின் சொந்தக்காரராகவும் மனேஜராகவும் இருக்கிறர். இவர் நல்ல கொடையாளி. சமூக சேவைகளில் இவர்முந்போக்கானவர். சமீபத்தில் மே. த. கவர்னர் யாழ்ப்பாணத்தில் திறந்துவைத்த வயோதிகர் விடுதிக்கு இவர் பெரும் பணம் கொடுத்துதவியிருக்கிறர். இவர் யாழ்ப்பாணத்தில் யாவராலும் மதிக்கப்படும் ஒருவராவர்.

ஆனியுத்தரம்

ஆனியுத்தர புண்ணியதினம் வருகிற (26 - 6 - 36) வெள்ளிக்கிழமையாகும். இப் புண்ணிய தினத்தன்று நடராசப் பெருமானைத் தரிசிக்கும்படி யாழ்ப்பாணத்திலிருந்து பலர் முந்தியே சிதம்பர யாத்திரை செய்யலாயினர். புலோலிப் பசுபதீசுரர் கோவிலில் உத்தர தினத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறும்.

கத்திவெட்டு வழக்குத் தவணையிடப்பட்டது

சென்ற 22-6-36 முற்பகல் புத்தூர் மேற்கைச் சேர்ந்த இராசரத்தினம் என்பவருக்கு ஓர் கொடுவாக் கத்தியால் வெட்டியதாகக் குற்றஞ் சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் வழக்குத் தொடரப்பட்டது. காயக்காரன் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இருக்கிறர். எதிரி 250 ரூபா பிணையில் விடப்பட்டு வழக்கு 27-6-36 க்குத் தவணையிடப்பட்டது. (க கி)

உளியாற்குத்திய தாற்படுகாயம்

மல்லாகம் பொலிஸ் கோட்டில் அளவெட்டியில் வசிக்கும் கணபதிப்பிள்ளை செல்லப்பா என்பவருக்கு அவ்வூர் (1) கணபதி வல்லிபுரம் (2 கணபதி சுப்பையா ஆகிய இருவருமாக ஓர் உளியால் 11 குத்துக் குத்தி அவனைக் காயப்படுத்தியதாக அவ்வூர் விதானையார் அவ்விருவர்மீதும் வழக்குத் தொடர்ந்தார்.

இவ்வழக்கில் கணபதிப்பிள்ளை கைம்பெண் கூறியதாவது:—

காயப்பட்டவன் எனது மகன்; நானும் எனது மகனும் சென்ற 17-ம திகதி இரவு 11 மணியளவில் வீட்டில் நித்திரைசெய்தோம்; செல்லப்பா சத்தம்போட்டார்; நான் ஓர் அரிக்கன்லாம்புடன் ஓடிச்சென்றேன். சுப்பையா என்பவர் செல்லப்பாவை அமர்த்திப்பிடிக்க, வல்லிபுரமென்பவர் ஓர் உளியால் குத்தினர். எதிரி எங்கள் உலக்கைளவாடி விற்ருர். இக்களவைக் கண்டுபிடித்தோம்; இதனுல் தான் இது நடக்க நேர்ந்தது.

இவ்வழக்கு 20ம் திகதிக்குத் தவணையிடப்பட்டது. எதிரி 150 பிணையில் விடப்பட்டார். (க. கி.)

சைவசித்தாந்த வகுப்பு

நிகழும் தாதுவருஷம் ஆனிமீ 8-ம் திகதி (21-6-36) ஞாயிற்றுக்கிழமை தொடங்கி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைதோறும் 8 மணி தொடக்கம் இரண்டு மணித்தியாலத்திற்கு ஏழாலைச் சாதுமடாலயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நால்வர் கோயில் சந்நிதானத்தில் சைவசித்தாந்த வகுப்பு ஒன்று நடாத்தப்படும். ஆயுள்வேத வைத்தியரும் சைவசித்தாந்த நூலறிஞரும் சைவாபிமானியுமாகிய திரு. ஐ. பொன்னையா அவர்கள சிவஞானசித்தியார் சிவஞானபோதம் முதலிய நூல்களுக்குப் பொருள் கூறுவார். இவ்வகுப்பில் சேர்ந்து படிக்கவிரும்புவோர் சென்று பொருள் கேட்குமாறு வேண்டப்படுகின்றனர்.

கடிதம்.

பலஸ்ரயின் கலகம்

பலஸ்ரயினில் அராபியர் செய்யுங் கலகம் வரவர முற்றிக்கொண்டது அராபியரும் ஆயுதபாணிகளாய் யுத்தஞ் செய்கின்றனர் பிருத்தானிய பட்டாளம் பொலிஸ் கலகக்காரருடன் எதிர்த்து யுத்தஞ் செய்கின்றனர் பிருத்தானிய ஆகாய விமானங்களும் அராபியர்மீது வெடிகுண்டு இடுகின்றன. இராணுவ வீரருள் ஒருவன் மாள மூவர் ஊறடைந்தனராம். கலகக்காரருள் 10 பேர் வரையில் இறந்தனரென்றும் பலர் ஊறடைந்தனரென்றுஞ் சொல்லப்படுகின்றது.

அராபியர் ஆகாயவிமானங்கள்மீது குண்டுப் பிரயோகஞ் செய்து சிலவற்றைச் சேதப்படுத்தினாராம்.

இத்தலிய - அபிஸீனிய விவகாரம்

அபிஸீனியாவிலே இத்தாலியர் பிரதான பட்டினங்களை மாத்திரம் கைப்பற்றினர்களேயல்லாமல் நாட்டுப்புறம் முழுவதும் இன்றும் அபிஸீனியர் வசம் இருக்கின்றதென்றும் அங்கே இத்தலியர் போதற்குத் தானும் நினைக்கவில்லை யென்றுந் தக்க ஆதாரத்துடன் அறியக்கிடக்கின்றது.

சாலாப்பெரும் பிரிவிலே செட் ஜாஸ் மாஜ மறியாம் என்னும் தேசாதிபதி இத்தாலியருடன் எதிர்த்து யுத்தம் புரிதற்கான ஆயத்தங்களைத்துஞ் செய்கின்றாராம். அடிஸ் அபாபாவிலுள்ள சனங்களிற் கூடிய தொகையினர் அந்நாட்டிற் போய்க் குடியேறி மேற்படி தேசாதிபதிக்கு உதவியாக நிற்கின்றனர்.

பாராளுமன்றத்தில் திரு. ஈடன் பதில்

22-6-36

ஆங்கில பாராளுமன்றத்துப் பொதுசனசபையில் சில அங்கத்தர் அபிஸீனிய — இத்தலிய விஷயமாக, அந்நியநாட்டு விவகார மந்திரியாகிய மிஸ்டர் அந்தனி ஈடனைச் சில கேள்விகள் கேட்டபோது அவ பின்வருமாறுவிடை சொன்னர்:—

"அபிஸீனியாவிற் பாதிநாட்டினைய இத்தலியர் இற்றை வரையிற் கை பற்றியுள்ளாரென்றும், அடிஸ் அபாபா, ஹரூர் ஹரூர்என்னுமிவைகளே பிரதானமானவை. ஏனையவையெல்லாம் அபிஸீனிய தேசாதிபதிகளால் இப்பொழுதும் ஆளப்பட்டுவருகின்றன. அபிஸீனியாமீது இத்தலியர் கொண்டுள்ள அதிகாரத்தைப் பிருத்தானியர் இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை."

மததித்தரைக் கடலில் நிற்கும் பிருத்தானிய கடற்படையை பிருத்தானியர் தவிர்த்தாலொழிய லிபியாவில் மேலதிகமாக நிற்கும் இத்தலிய சைநியத்தை இத்தலியர் அகற்றப்போவதில்லையாம்.

விநோதக்கொத்து.

செந்நீர் ஊற்று

லாவிச்டு என்ற விடத்திற் கருகிலுள்ள ஓரிடத்தில் ஓர் 'ஊற்றிருக்கின்றதாம். அந்தவூற்றிலிருந்துவெளிவரும் நீர் இரத்தம் போன்று சிவந்த நிறத்தை யுடையதாயும் பிருபிசுளுடையதாயும் இருக்கின்றதாம்.

வயோதிகர்க்கு மங்கை தேவையாம்.

கான்சான்ஸ் நகரத்தில் ஒண்டியாக வாழும் ஒரு கிழவர் தமக்கு ஒருமனைவி தேடித்தரவேண்டுமென்று அந்த ஊர் மேயருக்கு எழுதிவேண்டிக் கொண்டிருக்கிறர். கிழவருக்குச் சமயல்வேலையில்மிகப்பிரியமாம். இருபது முதல் இருபத்தாறு வயது முதல் இருபத்தாறு வயதுவரையிலுள்ள ஒரு மனைவி கிடைத்தால் வீட்டு வேலைகளையெல்லாம் அவர் சந்தோஷமாகச் செய்வாராம். அவருக்கு வேண்டியது உண்மையில் கணவரே!

சாதனை விவாகரத்து:

பிரஞ்சு வியாபாரி ஒருவரின் ஆங்கில மனைவி, பத்துப் பிள்ளைகளைப் பரித்து பெற்றவள். பாரிஸ் நீதிஸ்தலத்தில் விவாகரத்து வழக்குத் தொடர்ந்திருக்கிறள் தமது உடல் வன்மைக்கு அதிகமாகத் தமது கணவர் தம்மிடம் குழந்தைகளைப்பெறும்படி செய்து தமக்குக் கொடுமை இழைத்துவிட்டார்; என்பது அந்த அம்மையார் வாதம். அதனுல் அந்த அம்மையார் உடல் நலம் ஆயுள் முடிவுவரை சீர்கெட்டு விட்டதாம். அதற்காக விவாகரத்தும் நஷ்ட ஈடும் வேண்டுகிறர்.

கணவர் சொல்வதைக் கேளுங்கள் மதத்தின் கட்டளைப்படி இல்வாழ்க்கைக்குரிய கடமையைத் தாம் செய்திருப்பதாயும் உலகத்திற்கு ஆறு புதல்வர்களைத் தாம் அளித்திருப்பதாயும் அவர்கள் வருங்காலத்தில் தேசத்தைக் காக்கும் வீரர்கள்ஆவார்களென்றும் அவர்சொன்னார் (நான்கு பிள்ளைகள் அற்பாயுளில் இறந்து போயினவாம்) வழக்கு முடிவு இன்னும் தெரியவில்லை.

பரிசும் வேண்டாம் தொல்லையும் வேண்டாம்

இத்தலி நாட்டில் அல்ஜோனகவ என்ற ஊரில் லூகி கிராட்டினி யென்ற விவசாயிக்கு ஒரு லாட்டரிச் சீட்டில் 76,000 பொன் பரிசு விழுந்திருந்தது. ஆனுல் அவன் ஜனங்கள் தொல்லை செய்வார்களென்று அவன் அந்தப் பரிசை மறுத்து விட்டானும். முதலில் பரிசு பெற்ற டிக்கட் தன்னுடையதல்ல என்று சொன்னன். பின்னர் கணக்குகளைப் பார்த்து அவன் டிக்கட்டுத்தான் என்று சொல்லிய பின்னர் அவன் அதைக் கிழித்துப்போட்டு விட்டதாகச் சொன்னனும். நூற்றுக்கணக்கான கடிதங்கள் தனக்கு வந்திருப்பதாகவும் இந்தத்தொல்லைகள் தனக்கு வேண்டாமென்றும் அவன் சொன்னனும்.

பளிங்கு றயில் வண்டி

ஐரோப்பாவில் சில நகரங்களில் ஒளி மிகுதியாகத் திகழும்பொருட்டு கண்ணுடியினுல் வீடுகட்டுகிறர்கள். இப்பொழுது ஜெர்மனியில் மேற்பாகம் முழுமையும் பளிங்கினுல் அமைந்த றயில்வண்டிஏற்படுத்தியிருக்கிறர்கள். றயில்வண்டிகளில் யாத்திரை செய்கிற மக்கள் அங்கங்கே காடுகளிலும் வனங்களிலும், உள்ள இயற்கைக் காட்சிகளைத் தாராளமாக கண்டுகளிக்கும் பொருட்டு இந்த வண்டிகளைச் செய்திருக்கின்றனராம்.

பாலர் பகுதி

பக்ஷிகளின் கூண்டு

அருமை மருமக்காள்!

இம்முறை உங்களுக்குப் பக்ஷிகளின் கூண்டுகள் செய்யும் விதத்தைப்பற்றிக் கூறப் போகிறேன். அவைகளில் சில மாதிரிகளை மாத்திரம் இங்கே கூறுகிறேன். அவைகளைச் செய்வதற்கு நீங்கள் சேகரம் செய்யவேண்டிய சாமான்கள் பின்வருமாறு:—

1. தென்னை ஈர்க்குகள் அல்லது மெல்லிய மூங்கில் சிம்புகள்.
2. வட்டமான அல்லது சதுரமான மட்டைத்துண்டுகள்.
3. ஓர் ஊசி, கொஞ்சப் நூல், ஒரு வளையம்.
4. வர்ணக் காகிதம், பிசின் இவைகளே.

குறுக்களவு 5 அங்குலமுள்ள இரண்டு வட்டமான மட்டை வெட்டிக்கொள். சுமார் 8 அங்குல நீளமுள்ள குச்சியை ஒடித்து வைத்துக் கொள். மேலே எடுத்துக் கொண்ட இரண்டு மட்டைகளின் ஓரங்களிலும் குச்சி செல்லக்கூடிய துவாரங்களைச் செய்துகொள். கீழ் மட்டைத்துண்டுக்கும் மேல் மட்டைத்துண்டுக்கும் 4 அங்குல தூரம் வைத்துக் குச்சிகளைச் செருகி விடு; மேலே நீட்டிக் கொண்டிருக்கும் குச்சிகளை ஒன்ருகச் சேர்த்துக் கோபுர உச்சி முனைபோல் காணும்படி ஒரு நூல் கொண்டுகட்டு. பக்ஷி உட்காருவதற்கு ஒரு குச்சியையும் கூண்டின் குறுக்கே கட்டலாம். அடித்தட்டு மேல்தட்டு இவைகளைச் சுற்றி மெல்லிய வர்ணக் காகிதங்களைத் தோரணம் கத்தரித்து ஒட்டுவது அழகாக இருக்கும்.

மற்ருெரு கூண்டு

இதற்கு மேலே சொன்னது போல் 6 அங்குலக்குறுக்களவு உள்ள இரண்டு வட்டமான மட்டைகள் தேவை. குச்சிகள் 7 அங்குல நீளமுள்ளனவாக இருக்கட்டும். மட்டையின் ஓரங்களில் துவாரம் செய்து குச்சிகளைச் செருகு. தொங்க விடுவதற்காக மேல் மட்டையில் ஒரு வளயத்தையும் செருகு; அல்லது தைத்துவிடு. பக்ஷி நடுக்குச்சிமீது ஏறவும் இறங்கவும் ஈர்க்குச்சியாலேயே ஓர் ஏணி செய்து சாய்த்து வை. இரும்புக் கம்பி கிடைக்குமானுல் ஒரு சிறு ஏணி செய்து அதை வளைத்து வை.

வேருெரு கூண்டு

இது ஒரு சதுரக் கூண்டு. இதற்கு 6 அங்குல சதுரமுள்ள இரண்டு மட்டைகளும், 7 அங்குல நீளமுள்ள குச்சிகளும் தேவை. முன்னே சொன்ன மாதிரி கூண்டைச் செய்; ஏதாவது ஒரு கிளியின் படம் கிடைத்தால் அதை ஓர் மட்டையில் ஒட்டி நடுவிலுள்ள குச்சியின் மீது கிளி நிற்கிறது போல் வை. இது பார்வைக்கு வெகு அழகாக இருக்கும்; கிளி வெளியே வரும்படி ஒரு வாசற்படி செய்து வைப்பது அவசியம் இந்த வாசற்படி 4 அங்குல; அகலமும் 3½ அங்குல உயரமும் இருக்கலாம். ஏதாவது ஒரு பக்கத்தில் இம்மாதிரி வாசற்படி செய்து வைத்துக் கொள்ளுக. திறந்து மூடும்படி கயிருவது கம்பியாவது கட்டிக் கொள்ளவேண்டும்.

உங்கள் வாஞ்சையுள்ள சுப்புமாமா.

செம்படவனை முதலை தாக்கிக் கொன்றது

தடிகளோடு முதலையைத் தேடினர்

தங்காலை ஜூன் 21—

இங்கிருந்து சில மைல் தூரத்திலிருக்கும் ரேக்கவா என்ற கிராமத்தின் பாவைக் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த ஆர். ஸாதிரிஸ் என்ற செம்படவன் சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகலில் ஒரு முதலையால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். இது விஷயமாக நேற்றுப் பிரேதவிசாரணை நடந்தது;

அந்தப் பாவைக் கடலில் முதலைகள் அதிகமென்று சொல்லப்படுகிறது. அந்தச்செம்படவன் கரையோரத்தில் குனிந்து நின்ற வண்ணம் வலையை மெதுவாக இழுத்துக்கொண்டிருக்கையில் ஒரு பெரிய முதலை அவன்மீது திடீரென்று பாய்ந்து அவன் தலையைக் கௌவிக் கொண்டு ஜலத்திற்குள் சென்றது. பக்கத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மற்றொருவன் அதைக்கண்டு கூச்சலிட்டான். சீக்கிரத்தில் பலர் கூடித் தடிகளோடு பாவைக் கடலில் முதலைகொண்டுசென்ற மனிதனைத் தேடினர்கள்.

கொஞ்ச நேரம் கழித்துச் சிறிது தூரத்திற்கப்பால் கரையோரத்தில் ஒரு புதருக்கடியில் அவனுடைய உடல் கண்டுபிடிக்கப்பட்டது. முகத்திலும் தலையிலும் பற்கள் பதிந்து ஆழமான காயங்கள் ஏற்பட்டிருந்ததால் தோற்றம் விகாரமடைந்திருந்தது.

அபிஸீனியமன்னரைக் கொண்டுபோன விமானம்

நேற்றுக் காலையில் கொழும்பு நகர் மேல் ஓர் கடல்விமானம் பறந்தது. தற்சமயம் துறைமுகத்தில் தங்கியுள்ள எண்டர்பிரைஸ் என்ற படைக்கப்பலிலிருந்து அது பறந்துவந்தது. சில மணி நேரம் பறந்தபின் அது கப்பலுக்குத் திரும்பிச்சென்றது. மேற்படி படைக்கப்பல்தான் அபிஸீனிய மன்னரைப் பாலஸ்தீனத்திற்குக் கொண்டுபோனது.

சீன வியாபாரிகளுக்குக் கட்டுப்பாடு

இலங்கைக்கு விசேஷமாக சீனத்துணி வியாபாரிகள் வருவதைக் கட்டுப்படுத்துவதைப்பற்றி வெகு சீக்கிரத்தில் தொழில் வர்த்தக நிர்வாகக் கமிட்டியார் ஆலோசித்து ஒரு முடிவு செய்வார்களென நம்பப்படுகிறது. இதுபற்றித் தொழில் கண்ட்ரோலர் ஒரு யாதாஸ்தை நிர்வாகக் கமிட்டியாரின் பார்வைக்கு அனுப்பியிருக்கிறர். இலங்கைக்கு வரும் சீனர்களில் அநேகர் துணிவியாபாரிகள். இவர்கள் தெருத் தெருவாகச்சென்று பட்டுப்புடவைத் தினுசுகளை விற்கின்றனர். இவர்களுள் பல்கட்டுபவர்களும் சிலர் வருகின்றனர்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாது௵
ஆனி ௴ ௧௨௳ வியாழக்கிழமை

கௌரவப் பட்டங்கள்

அரசசக்கரவர்த்தி பிறந்த தினக் கொண்டாட்ட காலத்தில் சக்கிராதிபத்தியத்தில் வசிப்போருள் தக்காரைத் தெரிந்து தெரிந்து அவர்கள் தகைமைக்குத் தகுந்தபடி கௌரவப் பட்டங்களை வழங்குவது அரசினர் செயலாகும், அப்படியான கௌரவப் பட்டங்களைப் பெறுவோர்க்கும் பெறுபவரைச் சேர்ந்த சாதியினர்க்கும் மகிழ்ச்சியும் பெருமையும் உண்டு. இலங்கையிலேயுள்ள சிங்களர் தமிழர் இஸ்லாமானவர் பறங்கியர் அயிரோப்பியர் ஆகிய இவர்களுள் தக்கார்க்கு, 'ஸேர்' பட்டம், அதிகாரப் பட்டம், இராசவாசல் முதலியார் (சும்மா) முதலியார் சமாதான நீதிவான் முகாந்திரம் முதலிய பட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வருடத்திலும் அரசர் ஜெநநதின சம்பந்தமாக இலங்கைமக்கள் சிலருக்கு இப்படியானபட்டங்கள் அளிக்கப்பட்டலாயின. இங்குள்ள தமிழ் மக்களுள் முதன்மைப்பட்டமாகிய "ஸேர்" என்ற பட்டத்தை காலஞ்சென்ற பெரியார்களாகிய முத்துக்குமாரசுவாமி, அருணாசலம், இராமநாதன், அம்பலவாணர் கனகசபையென்னுந் தமிழ்ப் பிரபுக்கள் வகித்து வந்தனர்.

நாம் மேலே எடுத்துக்காட்டிய தமிழ்ப் பிரபுக்கள் விஷயத்தில் அவர்கள் வகித்தமையினால் அப்பட்டம் பெருமை யடைந்ததென்று சொல்லுவதேயல்லாமல், அப்பட்டத்தைப் பெற்றதினால் அவர்களுக்கு யாதுங் கௌரவம் கூடியதில்லையென்பது மிகையாகாது. காரணம் என்னையெனில், அத் தமிழ்ப் பெரியார் தங்கள் நாடு சாதி சமயம் பாஷையென்னுமிவற்றின்பொருட்டு உண்மையிற் பெரிதும் உழைத்தவர்களாவர். இதனை இந்த இலங்கை அறியும். சென்ற சில வருடகாலமாகத் தமிழ் மக்களுக்கிடையே ஒருவருக்காயினும் "ஸேர்" பட்டம் இல்லையே என்ற இங்குள்ள தமிழர் கவலைப்படுகிறார்கள். தமிழருக்குள் "ஸேர்" பட்டம் வகித்தவர் ஒருவராயினும் இப்பொழுது இருந்தால்நல்லதுதான்; ஆனால் இப்பட்டம் இல்லாமையினாலே தமிழ்ச்சாதியத்தாருக்கு வரக்கூடிய குறைவு யாதும் இல்லையெனலாம். "பெருமையுஞ் சிறுமையும் தான்றர வருமே" யென்றாங்கு எந்தச் சாதிமக்களும் தங்கள் தியாகத்தினாலும் தொண்டினாலும் செயற்கருஞ் செயல்களினாலும் தம்மைப் பெருமைப்படுத்தல் முறையாகுமேயல்லாமல், அரசினரிடத்துப் பெறும் பட்டங்கள் வாயிலாக மாத்திரம் பெருமையடைதல் முடியாதெனலாம். அரசினரிடத்தில் ஒரு பட்டத்தை ஒருவர் பெற்றால் பெற்ற தமக்கும் அதனைப் பெறாதவருக்கும் யாதாயினும் பேதம் இருக்கவேண்டாமா? இப்படியான பட்டங்களைப் பெறுபவர்கள், அவ்வப்பட்டத்தினைத் தத்தம் நாமத்திற்கு முன்னே பின்னே வரைந்து விடுகிறார்களேயல்லாமல் வேறு எக்கருமத்தை விசேஷமாகச் செய்கின்றனர்? தேசத்திற்கு முக்கியமாக இவர்கள் ஆற்றுந் தொண்டு என்ன? சமாதான நீதிவான் பட்டம் பெற்றவர்களால் மாத்திரம் சத்தியக் கடுதாசி முடிப்பவர்களுக்கு ஒரு வசதி யுண்டெனலாம். இப்பட்டம் பெற்றவனையோரால் நமது நாட்டிற்கு ஏதும் விசேஷநன்மை ஏற்பட்டதாகப் புலப்படவில்லையே. இப்படியான பட்டங்களை அளிப்பவர்களாகிய அதிகாரிகளும் ஏற்பவர்களும் இவற்றை வியாபார மாக்கிக்கொள்ள வேண்ணாது. வியாபாரமுறையில் வர்த்தமையினாற்றான் இப்பட்டங்களுக்கு ஊரிலே முன்னிருந்த மதிப்பும் கௌரவமும் இக்காலத்தில் இல்லாமற் போய்விட்டன. பட்டங்களைப் பெற நேர்ந்தோர் பெற்றபின்னாயினும் நமது நாட்டின் சாதியின் ஈடேற்றத்தை யிட்டு உழைத்தல்வேண்டும். இப்படி உழைக்கப் புகுவரேல், ஊரவர்கள் இவர்களுக்கு இன்னும்மேலான பட்டங்களை வழங்கி இவர்களைப் பாராட்டுவார்கள். இந்தியாவிலே தேசத் தொண்டாற்றியவர்களுக்கு மகாத்மா, தேசபந்து, தேசத்தொண்டன் முதலிய பட்டங்கள் சனங்களால் வழங்கப்பட்டிருப்பதை நோக்குமிடத்து அதிகாரிகளாற் கொடுக்கப்பட்ட பட்டங்களைக் காட்டிலும் ஊரவர்களாற் கொடுத்த இப்பட்டங்கள் நூறுமடங்கு மகத்துவமுடையன வென்பதும் அழியாப்புகழோடு கூடியவையென்பதும் எவரும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்லவா? நமதுநாட்டு மக்களும் இப்படியான பட்டங்களைப் பெறுதற்கான தொண்டுகளை ஆற்றுவதே விசேஷமாகும்.

"தோன்றிற்புகழொடுதோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று."

மற்றொரு யுத்தம் நிகழுமா?

சர்வதேச சங்கம் உலகில் அமைதியை நிலைநாட்டுதற்காக ஆரம்பிக்கப்பட்டது. இப்போது அச் சங்கம் தனது நோக்கத்தை நிலைநாட்டும் ஆற்றல் அற்பமேனும் இல்லாத ஓர் ஸ்தாபனமாக மாறிவிட்டது. வெறும் பேச்சளவிலேயே அது கருமங்களை நடாத்தி வருகின்றது. இத்தாலிய—அபிஸீனியயுத்தம் ஏற்பட்டகாலை, அஃது இத்தாலியின் யுத்தத் திமிரை அடக்குதற்குத் தகுந்த முறைகளைக் கையாடத்தவறிற்று. ஆயின், சொல்லளவில் மாத்திரம் அது இத்தாலியின் செயல் 'யுத்த தருமத்திற்கு மாறானது — நீதிக்கு மாறானது' என்று மாரடித்து வந்தது. எனினும், இத்தாலியில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தக் கூடியதாகச் சில நிர்ப்பந்தமுறைகளை அது கையாடிற்று. இப்போது இந் நிர்ப்பந்தமுறைகளைத்தானும் நீக்குதற்கு அது முற்பட்டு நிற்கிறது. நிர்ப்பந்தங்களை நீக்கிவிடின், ஐரோப்பாவில் புதியதொரு யுத்தம ஏற்படாமல் தடுத்தற்குரிய வழிகளில் முயற்சியெடுத்துக் கொள்ளலாமென பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்ரர் பால்டுவின் தெரிவிக்கிறார்.

பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி என்னும் மூன்றுநாடுகளும் ஒருமித்துக் கருமம் ஆற்றில், அது கைகூடும் என்பது மிஸ்ரர் பால்டுவினது கருத்தாகும். பிரிட்டனும் பிரான்சும் இத்தாலிக்கு அஞ்சுவதைக்காட்டிலும ஜெர்மனிக்கே மிக அதிகமாக அஞ்சுகின்றன. இத்தாலி ஜெர்மனியைத் தட்டிக் கொடுத்துத் தானும் ஜெர்மனியோடு கலந்து யுத்தமாற்ற முயற்சிக்கின்றது என்பதே இத்தாலியின்மீது இவ்விரு நாடுகளுக்குமுள்ள அச்சமாகும். ஆகவே, நிர்ப்பந்தமுறைகளை நீக்கி, அபிஸீனியா என்னும் இறைச்சியை இத்தாலி என்னும் நாய்க்குக் கவ்வக் கொடுத்து அதைப் பாராக காட்டிவிட்டு, ஜெர்மனியை அடக்குவதில் தம முழுக் கருத்தையும் செலுத்தலாமென அவை எண்ணுகின்றன. ஆயின், இது கைகூடுமோ என்பதே கேள்வி. சென்ற ஐரோப்பிய மகாயுத்தத்தில் தான இழந்த குடியேற்ற நாடுகளை மீண்டும் பிடிப்பதே ஜெர்மனியின் நோக்கமாகும். இதற்குச் சர்வதேச சங்கம் பெரியதொரு முட்டுக்கட்டையாக இருக்கின்றது. இச் சங்கத்தைக் குலைப்பதே ஜெர்மனியின் கருத்தாகும். முதலில், ஜப்பான் அச் சங்கத்திலிருந்து விலகிற்று. அடுத்தாற்போல் ஜெர்மனியும் விலகிற்று. இத்தாலி சர்வதேச சங்கத்தை மீறி அபிஸீனியா மீது படையெடுத்ததைக் கண்ட ஜெர்மனி தன்னுள் மகிழ்ச்சியடையலாயிற்று. இத்தாலியின் செயலோடு அச் சங்கம் ஓர் உயிரற்ற ஸ்தாபனமாகிவிடும் என்ற நம்பிக்கையின்பேரில் ஜெர்மனி தான இழந்த குடியேற்ற நாடுகளை மீண்டும பெறுதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது. பிரிட்டனும் பிரான்சும் என்னசெய்யக் கூடுமோ? எவ்விதமும் இத்தாலியைத் திருப்திப்படுத்தி நிலைமையைச் சமாளிக்கலாம் என்னும் எண்ணமே அவற்றிற்கு உண்டாகியிருக்கின்றது. எனவே, நிர்ப்பந்தங்களை நீக்கவேண்டும் என்று பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியாகிய காப்டன் அந்தோனி ஈடன் கூறுகின்றார். அயர்லாந்தின் நிர்வாகசபைத் தலைவரான மிஸ்ரர் டிவலராவும் அதனை ஆதரிக்கின்றார். பிரதம மந்திரியாரும் அதற்கிசையவே பல்லவிபாடுகின்றார். உலக அமைதியை ஓம்புவதில் ஜெர்மனி எவ்வளவுதூரம் கலந்து உழைக்கத் தயாராக இருக்கின்றது எனப் பிரிட்டிஷ்அரசாங்கத்தார் ஜெர்மனியிடம் கேட்கலாயினர். ஜெர்மனி இன்னும் அதற்கு எவ்வித பதிலும் அளிக்கவில்லை. தென்மேற்கு ஆபிரிக்காவில், ஜெர்மனிய ஆட்சிக்குக் கீழிருந்த நாடுகள் தற்போது தென்னாபிரிக்க யூனியன் அரசாட்சியாரின் ஆதிக்கத்தில் "மாண்டேட்" ஆக இருந்து வருகின்றன. தென்னாபிரிக்க அரசாங்கத்தார் அது சம்பந்தமாக ஆராய்ந்து யோசனை கூறுமாறு ஒரு விசாரணைக்குழுவை நியமித்தனர். அவ் விசாரணைக் குழுவினர் அந்நாடுகளைத் தென்னாபிரிக்க அரசாங்கத்தில் ஒரு பகுதியாகக் கொள்ளலாமென அபிப்பிராயந் தெரிவித்திருக்கின்றனர். இதிலிருந்து என்ன புலனாகின்றது? தென்னாபிரிக்க அரசாங்கத்தார் சர்வதேச சங்கத்தை அற்பமும் பொருட் படுத்தவில்லை யென்பது வெள்ளிடை மலையாகின்றது. என்னை? சட்டப்பிரகாரம சர்வதேச சங்கமே அதற்கு மேலதிகாரியாகலின், நிலைமையிவ்வாறாக, சர்வதேசசங்கம் ஒழிந்துவிடின, ஜெர்மனி தனது குடியேற்றநாடுகள் மீது உரிமைபாராட்ட ஆரம்பித்துவிடும். இஃது இவ்வாறாகாதபடி தடுத்தற்காகவே பிரிட்டனும பிரான்சும தம்மாலானவரை முயல்கின்றன. பெயரளவிலாயினும் சங்கம் இருத்தல் வேண்டுமென்பதே அவர்களது நோக்கமாகும். இத்தாலியின்மீது ஏற்படுத்தப்பட்ட நிர்ப்பந்த முறைகளோடு சங்கம தனக்குள்ள குற்றுயிரையும் முற்றும் இழந்துவிடும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. அன்றியும நிர்ப்பந்தங்களை நீக்கிவிடுவதினால், இத்தாலி அமைதி அடைந்துவிடுமோ என்பதும் நிச்சயமில்லை. ஆகவே, ஐரோப்பாவில், மிக விரைவில் மற்றொரு யுத்தம் ஏற்படும் என்பதற்குரிய அறிகுறிகளே காணப்படுகின்றன. "ஞாயிறு கிழக்கே யுதிப்பது எவ்வாறு நிச்சயமோ அவ்வாறே ஐரோப்பாவில் யுத்தம் நிகழ்வதும் நிச்சயமாம்" என்னும் மிஸ்ரர் பால்டுவின் கூற்றும் உண்மையாகிவிடும் எனவே நாம் அஞ்சுகின்றோம்.

பாலஸ்தீனத்தில் அடக்குமுறை

பாலஸ்தீனத்தின் நிலைமை மிக நெருக்கடியான நிலைமையாக மாறிவிட்டது. அங்கு அராபியருக்கும் யூதர்களுக்கு மிடையே நடக்கும கலகத்தை நிறுத்துதற்குப் பலாத்காரமும் அடக்குமுறையும் கையாளப்பட்டு வருகின்றன. பிரிட்டிஷாரது பொலிஸாரும் துருப்புகளும் நிலைமையைச் சமாளிக்க முடியாமல், விமானங்களின உதவியும் அங்கு தேவைப்படுகின்றது. துல்காராம் பக்கம் ஆயுதந்தாங்கிய ஒரு பெரிய அராபியக் கூட்டத்திற்கும பிரிட்டிஷ் துருப்புகள், பொலிஸார், விமானங்களுக்குமிடையே பலமணி நேரம் போர்நடந்ததாக ஒரு தந்திச் செய்தி தெரிவிக்கின்றது. அராபியர் தமது நாட்டைக் காப்பாற்றவேண்டும் என்னும் ஆவேசங்கொண்டு போர்புரிகின்றனர். அங்குள்ள கிறிஸ்தவர்களும் அராபியரின் சார்பாகவே நிற்கின்றனர். யூதர்கள் மாத்திரம் பிரிட்டிஷாரது உதவியை உறுதுணையாக்கொண்டு போர்புரிகின்றனர். ஆதியில் பாலஸ்தீனம் யூதர்கள் நாடாகவே இருந்தது. ஆறும் நூற்றாண்டில், யூதர்கள் அராபியரால் தோற்கடிக்கப்பெற்று அங்கிருந்தும் துரத்தப் பெற்றனர். அக்காலந் தொடக்கம் யூதர்கள் நாடிழந்த ஜாதியாராகவே இருந்து வருகிறார்கள். இவர்கள் தங்கள் பூர்வீக நாடு என்ற நியாயப்திப் பாலஸ்தீனத்தைப் பெரிதும் விரும்புகின்றனர். சென்ற மகாயுத்தத்தின்பின், ஐரோப்பிய நாட்டினர், யூதர்கள் தாம் வெகுகாலமாகக் குடியேறுதற்கு அவாவுற்றிருந்த பாலஸ்தீனத்தில் குடியேறுதற்கு உதவிபுரிய முன்வந்தனர். காலஞ்செல்லச் செல்ல அதிகமான யூதர்கள்வந்து குடியேறுவதையும், அவ்வாறு குடியேறும் யூதர்கள் தமதுசெல்வமிகுதியினாலும்ஐரோப்பியவல்லரசுகளின் அரிய உதவியினாலும் அந்நாட்டிற் றமக்குள்ள செல்வாக்கை அதிகரிக்கச் செய்துவருதலைக் கண்ட அராபியருக்கு ஆத்திரமும் ஆவேசமும் கிளம்பலாயின. இதன் பலனாக, அங்கு நிலைமை மிக நெருக்கடியாக மாறியிருக்கிறது. இதில் பிரிட்டிஷார் கையாளும் முறை தக்கதோ தகாததோ என்பதே கேள்வி. அங்கு சட்டமும் சமாதானமும் நிலவும்படி பார்த்துக் கொள்ளுதல் தமது தலையாய கடன் என்று பிரிட்டிஷார் சமாதானங் கூறுகின்றனர். பாலஸ்தீனம் ஒரு பூரண குடியேற்ற நாடன்று. ஏனைய குடியேற்ற நாடுகளைப்போல அது பிரிட்டனுக்கு முற்றும் சொந்தமானதுமல்ல. இந் நிலைமையில் அங்கு பிரிட்டன் மிகக் கடுமையான அடக்கு முறைகளைக் கையாளுதல் தக்கதோ என்பது சந்தேகத்திற்குரிய விஷயமேயாம். சென்ற வாரம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இவ்விஷயம் விவாதிக்கப்பட்டபோது குடியேற்றநாட்டு மந்திரி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கருத்தை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். அங்கு பலாத்காரமும் கலகமும் அடங்கினாலன்றி அந்நாட்டினரின் குறைகளைப் பரிசிலனை செய்தற்குத் தாம் ஓர் அரசாங்க விசாரணைக்குழுவினரை அனுப்பப்போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே பாலஸ்தீனத்தின் நிலைமை அந்நாட்டின் முன்னேற்றத்தை விரும்பும் ஒவ்வொருவருக்கும் கவலையை விளைப்பதொன்றாகும். அராபியர்கள் வெறும் பலாத்காரத்தைக் காட்டிப் பின் பிரிட்டிஷாரது அடக்குமுறையால் அடங்கி நடக்கநேரின், அவர்களுக்கே அது வசைக்குரியசம்பவமாகும். ஆகவே அவர்கள் தக்க வழியில் தமது உரிமைகளுக்காக வாதாடுதலே முறையாகும். யூதர்களும் தாம் முற்றும் பிரிட்டிஷாரது துணையை நம்பி, தம்மோடு நெடிது உடன் வாழவேண்டியவர்களும், அந் நாட்டினரிற் பெரும் பான்மையோருமாகிய அராபியரை எல்லைகடந்து புண்படுத்தாமற் பார்த்துக் கொள்வதே முறையாகும். என்னை? ஒரு நாட்டில் பெரும்பான்மையோரது நல்லெண்ணமும் ஒற்றுமையும் இல்லையேல், அந்நாட்டிலுள்ள சிறுபான்மையோர் ஆபத்தின்றி அமைதியான வாழ்க்கை வாழுதல் முடியாதாகலின். இவ்வாறு அராபியரும் யூதரும் தம்முள்ளே சமாதானத்தை ஏற்படுத்திக்கோடலே தக்கதன்றி, பிரிட்டிஷார் அதில்தலையிடுவதால் நிலையான சமாதானமும் நல்லெண்ணமும் ஏற்படும் என்பது சந்தேகமே. அவர்கள் தலையிடுவதால், இவ்விரு ஜாதியாருக்குமிடையே மேலும் அமைதியின்மையும் வீண் மனஸ்தாபமுமே ஏற்படும் என்பது திண்ணம்.

பாலஸ்தீனத்தில் கடுமையான அடக்குமுறை

ஆயுதம் வைத்திருப்போருக்கு ஆயுள் தண்டனை

10 அராபியர் கொல்லப்பட்டனர்

எருசலேம், ஜூன் 21—

துல்காராம் பக்கம் ஆயுதந்தாங்கிய ஓர் பெரிய அரேபியக்கூட்டத்திற்கும் பிரிட்டிஷ் துருப்புக்கள், போலீஸார் விமானங்களுக்கும் பல மணி நேரம் போர் நடந்தது.

இதுவரை தெரிந்தமட்டிலும் துருப்புக்களில் ஒருவர் கொல்லப்பட்டார் 3 பேர் காயமடைந்தனர். 10 அரேபியர்கள்கொல்லப்பட்டனர். அவர்களில் எத்தனை பேருக்குக் காயமென்று தெரியவில்லை. துப்பாக்கி, வெடிகுண்டு, வெடிமருந்து, தீ வைக்கும் சாமான்கள் முதலிய வைத்திருந்தாலும் ஆயுள் தண்டனை விதிக்கப்படுமென்ற அவசரச் சட்டத்தைக் கடுமையாகவிருக்கும்படி மாற்றப்பட்டிருக்கிறது.

இந்த வார முடிவில் பிரிட்டிஷ் துருப்புகளுக்கு சுறுசுறுப்பாக வேலையிருந்தது. நாப்ளஸ் பக்கம் ஏபல் மலையில் ஓர் அரேபியக் கோஷ்டியை சீபோர்த் படையினர் சுற்றிவளைத்துக் கொண்டனர். அந்தக் கோஷ்டியினர் இரவு நேரங்களில் சமீபத்திலிருந்த பிரிட்டிஷ் துருப்பு முகாம்களின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டிருந்தனர். இந்தச் சம்பவத்தில் ஒரு அரேபியர் படுகாயமடைந்தார். 4 அரேபியர் கைது செய்யப்பட்டனர்.

மனைவியின் ஆவேசம்

புருஷன் தலையை ஒரே வெட்டில் வீழ்த்தினாள்

திருத்தும் முறை இதுவா?

ஆமதாபாத், ஜூன் 16

இந்நகருக்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண் ஒரு பட்டாக்கத்தியால் தன் கணவன் தலையை ஒரே வெட்டில் கீழே வீழ்த்தி, தலையை வீட்டிற்கு வெளியே எறிந்துவிட்டாள். அத்துடன் அவள் நிற்கவில்லை.

அதே கத்தியுடன் அவள் அக்கிராமம் முழுவதும் சென்று ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்துவிட்டாள். அவளைக் கைதுசெய்யப் பொலிஸார் செய்த முயற்சிகளும் வீணாயின. கடைசியாக 5 நாட்களுக்குப் பின்தான், பொலிஸார் அவளைப் பிடிக்க முடிந்தது. பொலிசார் அவளை நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்தபோது அவள் தான் செய்த கோரக்கொலையை ஒப்புக் கொண்டாள்.

குடிகாரனான தன் கணவனை நல்வழிக்குத் திருப்ப முடியவில்லையென்றும், அவன்மீது தனக்குச் சலிப்பு ஏற்பட்டு விட்டதால் அவனைக் கயிற்றினால் கட்டித் தலையை வெட்டி வீழ்த்தியதாயும் கூறினாள். கிராமவாசிகள் அவளைப் பிடிக்கச்சென்றபோது அவள் ரத்தந்தோய்ந்தகத்தியுடன் எல்லோரையும் பயமுறுத்திப் பத்திரகாளி போல் விளங்கினாள்.

கடைசியில் பொலிஸார் மிகவும் சிரமப்பட்டு அவளுக்கு நல்ல வார்த்தை கூறி அவளைப் பிடித்தனர்.

அப் பெண்ணுக்கு 22 வயதாகிறது.

வர்த்தக நிர்ப்பந்தங்கள் நீக்கப்படுமா?

பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியின் அபிப்பிராயம்

அயர்லாந்து நிர்வாகசபைத் தலைவரின் ஆதரவு

யுத்தம் நிகழும் என்ற அச்சம்.

ஜெனிவாவில் பிரிட்டிஷ் சர்க்காரின் அபிப்பிராயம் ஒப்புக்கொள்ளப்படுமாகில் இத்தாலிமீதுள்ள நிர்ப்பந்தங்களை முடிக்கக் கையாளப்பட வேண்டிய முறைகளைப்பற்றிப் பத்திரிகைகள் விவாதித்து வருகின்றன. அதற்கென ஓர் தேதி குறிப்பிடப்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது

நிர்ப்பந்தங்களை நீக்குவதென்று பொதுவாக ஓர் முடிவு செய்யப்படுமாகில் அவைகளை நீக்குவதில் காலதாமதம் ஏற்பட மாட்டாதென்றும், ஜூலை மாத மத்திக்குள் நிர்ப்பந்தங்கள் பூராவும் மறைந்துவிடுமென்றும் டெய்லி டெலிகிராப் பத்திரிகை கூறுகிறது.

அயல்நாட்டு மந்திரி காப்டன் அந்தோனி ஈடன் பேசியதை சுவாதீன அயர்லாந்தின் நிர்வாகசபைத் தலைவரான திரு திவாலரா ஆதரிக்கிறார். "கடுமையான நிர்ப்பந்தங்களைக்கையாள வேண்டுமென்று கூறுவோர் யுத்தத்திற்கும் தயாரா? அப்படி இல்லையாகில் அவர்கள் யுத்தத்தைத் தடுக்கவேண்டிக் கடுமையான நிர்ப்பந்தங்களைக் கையாடாமலிருந்தோரை நிந்திக்கக் கூடாது" என்று திவாலரா கூறினர்.

ரக்பி ஜூன் 20—

ஐரிஷ் ஜனப்பிரதிநிதி சபையில் திரு. திவாலரா, அபிஸீனியா விஷயத்தில் காப்டன் ஈடன் நடந்துகொண்ட முறையைப் பாராட்டி மேலும் பேசியதாவது:— நான் ஜெனிவாவிலிருந்தேன. நிர்ப்பந்தங்கள் வெற்றியடையத்தக்கனவாகவிருக்க முயற்சிகள் செய்யப்படாததற்குப் பிரிட்டன் காரணமல்ல. ஐரோப்பிய யுத்தத்தால் எவ்வளவு சேதமேற்படுமென்பதைப் பிரஞ்சுக்காரர்கள் ஏற்கெனவே அநுபவமூலம் தெரிந்து கொண்டிருக்கின்றனர். ஆகவே யுத்தமேற்படுவதைத் தடுக்க அவர்கள் யோசிக்க மாட்டார்களா? இன்னும் கடுமையான நிர்ப்பந்தங்களைக் கையாளவேண்டுமென்று கூறுவோர் யுத்தத்திற்கும் தயாரா? அதற்குத் தயாரயில்லையெனில் அவர்கள் யுத்தத்தைத் தடுக்கக் கடுமையான நிர்ப்பந்தங்களைக் கையாடாமலிருந்தோரை நிந்திக்கக்கூடாது.

திருத்தப் பிரேரணை

செவ்வாய்க்கிழமையன்று பிரிட்டிஷ் சர்க்கார்மீது காமன்ஸ் சபையில் ஓர் கண்டனப் பிரேரணை தொழிற்கட்சி சார்பாகப் பிரேரிக்கப்படும். அதற்குப் பிரிகேடியர் ஜெனரல் பியர்ஸ் (கன்ஸர்வேடிவ்) ஓர் திருத்தப் பிரேரணையைப் பிரேரிப்பார். அரசாங்கத்தாரை ஆதரிக்கும் ஏழுபேர்கள் அதை ஆதரிக்கின்றனர். அபிஸீனியாவை எதிர்த்து இத்தாலி நடத்தும் வேலைகளை மன்னிப்பதில் இங்கிலாந்து சேரமாட்டாதென்று ஜெனிவாவில் பிரிட்டிஷ் பிரதிநிதிகள் திட்டமாகக் கூறவேண்டுமென்றும், ஐரோப்பிய விஷயங்களில் இத்தாலியின் ஒத்துழைப்பைப் பெறவேண்டி இத்தாலி இந்நாட்டில் கடன் வாங்குவதை காமன்ஸ்சபை எதிர்க்கிறதென்றும் திருத்தம் கூறுகிறது.

பிரான்ஸில் திருப்தி

லண்டன் ஜூன் 18—

பிரிட்டன் நிர்ப்பந்தங்களை நீக்கிவிட முடிவு செய்ததைப் பற்றிப் பிரஞ்சு அரசாங்கப் பகுதியில் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. பிரஞ்சு அபேதவாத மந்திரிசபை அந்தரங்கத்தில் திருப்தியடைந்திருக்கும். பெரிய தொழிற்சாலைகளும் வர்த்தகர்களும் பாங்கர்களும் அதைச் சந்தோஷத்துடன் வரவேற்கின்றனர்.

ஜெர்மன் பாராட்டு

ஜெர்மன் பத்திரிகைகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவைப் பாராட்டி எழுதுகின்றன மிஸ்டர் ஈடன் சரியானபடி நிலைமையை அறிந்திருக்கிறார் என்று சொல்கின்றன.

கனடாவின் ஆதரவு

கனடா அரசாங்கமும் நிர்ப்பந்தத்தை நிறுத்திவிடுவதை ஆதரிக்கும். அதன் ஜெனிவா பிரதிநிதியை பிரிட்டனை ஆதரிக்கும்படி உத்தரவு செய்யுமென்று பிரதம மந்திரி மிஸ்டர் மாக்கன்ஸி கிங் கனடா பார்லிமெண்டில் அறிவித்தார்.

"நிர்ப்பந்தங்களை நிறுத்தவதைத் தவிர வேறு வழியில்லை. சங்கத்தின் மூலம் உலக சமாதானம ஏற்படுத்த முயற்சிக்க வேண்டுமென்பதே கனடாவின் நோக்கம். அதற்குக் கனடா ஒத்துழைக்கவும் தயாராக விருக்கிறது. கனடா தனித்து நிற்க முடியாது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடனும, யுனைட்டட் ஸ்டேட்ஸுடனும கனடா சம்பந்தப்பட்டு நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் எப்பொழுதும் இருக்கிறது" என்றும அவர் தெரிவித்தார்.

பிரான்ஸ் பின்பற்றுகிறது

பாரிஸ் ஜூன் 19—

பிரஞ்சு அரசாங்கம் பிரிட்டனைப் பின்பற்றி நிர்ப்பந்தங்களை நீக்கிவிடத் தீர்மானித்திருக்கிறது. வெளிநாடுகளிலிருக்கும் பிரஞ்சு ஸ்தானிகர்களுக்கு இது விஷயமாய் மந்திரி சபை அறிவித்து விட்டது.

கூட்டுமுறை நடவடிக்கைகளுக்குப் பிரஞ்சு அரசாங்கம் எப்பொழுதும் ஆதரவளிக்குமென்றும் சங்கம் எவ்வித முடிவு செய்தாலும அதற்கு பிரான்ஸ் கட்டுப்படுமென்றும் பிரஞ்சு அந்நியநாட்டு மந்திரி எம். டெல்போஸ் அறிவிக்கிறார்.

கூட்டுமுறை நடவடிக்கை எப்படி எடுப்பது என்கிற விஷயமாகவும் பிரஞ்சு மந்திரிசபை ஆலோசித்து முடிவுசெய்திருப்பதாகத்தெரிகிறது.

தீக்கும் அஞ்சாத அன்பு.

அமெரிக்காவில் மாக்ரிகர் என்னுமிடத்திற்கு வடபுறத்தில் ஒருகிராமமுண்டு. இந்தக்கிராமத்தில் ஹென்ரி லாரன்ஸ் என்பவருக்கு ஒரு தோட்டமுண்டு இங்குள்ள ஒரு பூனை குட்டி போட்டிருந்தது. திடீரென பூனை தங்கியிருந்த குடிசையில் தீப்பிடித்துக்கொண்டது. பூனை உடனே என் செய்தது? ஒவ்வொருகுட்டியாய்த் தூக்கிக்கொண்டு போய்ப் பத்திரமான ஓரிடத்தில் வைத்தது. ஒவ்வொரு குட்டியையும் காப்பாற்ற இது நெருப்புக்கும் பயப்படாமல் நெருப்பினூடே பாய்ந்தது எவருக்கும் ஆச்சரியத்தை உண்டுபண்ணியது. தீயணைக்கும் இயந்திரங்கள் வந்து தன் குட்டிகளைக் காப்பாற்றும் வரையில் அந்தப்பூனை காத்திருக்கவில்லை.

எட்டாவது எட்வர்ட் மன்னரின் 42வது வருஷபூர்த்தி

ஆயுள் பரியந்தம் பிரமச்சாரியாக இருக்க மாட்டாராம்

தற்காலத்தில் உலகில் பிரம்மச்சாரி மன்னராகவும், 1760-ம் வருஷத்திற்குப் பின் முதலாவதாகச் சிம்மாஸனத்தில் வீற்றிருக்கும பிரம்மச்சாரி மன்னராகவும் விளங்கும் எட்டாவது எட்வர்ட் மன்னருக்கு நேற்று முன்தினம் 42 வயது பூர்த்தியாயிற்று.

இவருக்கு முன் ராணியில்லாமல் சிம்மாஸனமேறிய கடைசிப் பிரிட்டிஷ் மன்னர் மூன்றும் ஜார்ஜ் ஆகும். மூன்றாவது ஜார்ச் மன்னர் சிம்மாசன மேறும் பொழுது அவரதுவயது 22 தான். சிம்மாஸனமேறி ஒரு வருஷமானபின் அவர் விவாகம் புரிந்து கொண்டார்.

இத்தினத்தில் எட்டாவது எட்வர்ட் மன்னரின் பிறந்த தினத்தை இலங்கை எனைய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள் கொண்டாடுவது போலச்சிறப்பாகக்கொண்டாடிற்று. பிரிட்டிஷ் பிரம்மச்சாரி மன்னர்களில் இவர் 17 வதுமன்னர் ஆவர். இதர 16 பிரம்மச்சாரிமன்னர்களில் 13 பேர்கள் சிம்மாசனமேறியபின் மணம் புரிந்துகொண்டனர். இருவர் இளமைப் பருவத்திலேயே மாண்டனர்.

வில்லியம் ரூபஸ் என்ற மன்னர் தான 30 வயதானபின் சிம்மாஸனமேறினர். அவர் பிரம்மச்சாரியாகவே இருந்து ஆட்சி புரிந்தார்.

ஆனல் எட்டாவது எட்வர்ட் அப்மாதிரி ஆயுள் முழுவதும் பிரமமச்சாரியாக விருக்கப் போவதாகக் கூறவில்லை. காமன்ஸ் சபைக்கு அனுப்பிய ஓர் செய்தியில் ராஜகுடும்பச் செலவை அனுமதிக்கையில் தமது விவாகமும் சவனிக்கப்படவேண்டுமென்றும ஆகவே ராணிக்கென்றும அவரது குடும்பத்திற் கென்றும பணம்ஒதுக்கப்படவேண்டுமென்றும எட்டாவது எட்வர்ட் மன்னர் குறிப்பிட்டிருந்தார்.

நாயின் கார்ச் சவாரி

இங்கிலாந்தில், ஏரானமான பெட்டை நாய்கள் வைத்திருப்பவர்களில் ஸ்ரீமதி விப்புஷ் என்பார் ஒருவர். இவர் அருமையாக வளர்த்த ஒரு நாயைக் கூட்டிக்கொண்டு லண்டன் கடைகளுக்குச் சென்றார் இவர் பல கடைகளுக்குப் போய்ச் சாமான்கள் வாங்கிக்கொண்டிருந்த சவனத்தில் நாயை மறந்துவிட்டார். நாயும் எஜமானி சென்ற இடம் தெரியாமல் திகைத்தது ஆனல அது அங்குமிங்கும் ஓடித் தன எஜமானியைத் தேடாமலில்லை கோடியாக வாடகைமோட்டார்கள் நிற்குமிடத்திற்குச சென்றது. அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு காரில் திடீரென ஏறிக் குதித்து டிரைவர் பக்கமாய் உட்கார்ந்து, தன் கழுத்தில கட்டியிருக்கும் செப்புப் பட்டயத்தைக் காட்டியது. டிரைவர் அந்த நாயின் சொந்தக்காரியின் பெயரையும் விலாசத்தையும் வாசித்தறிந்து அந்த இடத்திற்கு ஓட்டிச் சென்றார் உண்மையில் அது தான் நாயின் எஜமானியின் வீடு

மாத்தறைப் பகுதியில் மலேரியா

ஆஸ்பத்திரிகளுக்கு வருவோரின் தொகை அதிகரிப்பு

மாத்தறைப்பகுதியில் மலேரியா மிக அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது சென்ற சிலவாரங்களாக ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்கு வருவோர்களின் தொகை விசேஷமாக அதிகரித்திருக்கிறது. சிலர் கொடிய மலேரியாவினல் பீடிக்கப்பட்டிருப்பது வைத்திய அதிகாரிகளின் கவனத்திற்கு வந்திருக்கிறது.

வைத்திய இலாகா இதற்குவேண்டிய நடவடிக்கைகளை உடனே எடுத்துக்கொள்ளும்படி சுகாதார மந்திரி திரு. டபிள்யு. ஏ. டி. ஸில்வா ஏற்பாடு செய்திருக்கிறார்.

உலகம்பலவிதம்

(முற்றொடர்)

தன் மகள் கைலாயத்திலே இருக்கிறாள் விரைவில் மீண்டு வருவாள் என்று இராமசுவாமிப் பிள்ளை சொன்னதைப் பறுவதம் புத்தியில்லாதவளாதலால், மெய்யென்று நம்பிவிட்டாள். மகள் வருவாளோ, எப்போது வருவாள் என்று மனைவி கேட்கும் நேரமெல்லாம் கணவனும் ஒவ்வொரு தவணைசொல்லி, அவளுடைய நம்பிக்கையைப் பெலப்படுத்தி வந்தாரே யொழிய உண்மையைச் சொன்னாரல்லர். பறுவதம் தன் மகளிடத்தில் எல்லை கடந்த அன்பு பூண்டவளாதலின், உண்மையை வெளிவிட்டால் அவளுக்குக் கவலை மேலிட்டினல் யாதும் மாறுட்டம் வந்துவிடுதலுங்கூடுமே யென்ற அச்சத்தினற்றான் இராமசாமிப் பிள்ளை தம்முடைய பேய்த்தனமான மனைவிக்கு இப்படித் தவணை சொல்லிவந்தார். எப்படியோ ஒரு தினம் தன் மகளைத் தான் பார்க்கலாமென்ற நம்பிக்கை அவளிடங் குடிகொண்டது. அயலிலுள்ள பெண்களும் பறுவதத்தின் மூடத்தனத்தை நன்கு அறிந்தவர்களானதினலும் அவள் உண்மையைச் சொன்னல் கவலைப்படுவாளென்று எண்ணியும் இராமசாமிப்பிள்ளையைப்போலவே அவர்களும் அவளுக்குச் சொல்லிவந்தார்கள்.

* * *

இங்ஙனமாக, அயற் கிராமத்திலுள்ள அம்மையன் என்னும் பெயருடைய திருடனெருவன் நமது இராமசாமிப்பிள்ளை தம் மனையாட்குச் சொல்லிவந்த உபாயத்தையும் அவளுடைய பேய்த்தனத்தையும் நன்கு அறிந்துகொண்டான். அவன் இராமசாமிப்பிள்ளை வீட்டிலில்லாத சமையம் பார்த்து ஒரு சந்நியாசி வேடம் தரித்துக்கொண்டு அந்த வீட்டிற்கு வந்தான். அச் சந்நியாசியைக் கண்ட பறுவதம் அவனை உபசரித்து வணங்கி யொருபுறத்தே கவலையோடு நின்றாள். "தாயே நீ கவலைப்படவேண்டாம். ஒரு அருமையான சிவனைப்பற்றித்தான் வருத்தப்படுகிறாய்; அந்தச் சிவனும் வெகுதூரத்தில் இருந்துகொண்டு உங்களைப்பற்றிக் கவலைப்படுகின்றது; இப்பொழுது இரண்டு சிவன்களும் சந்திக்காவிட்டாலும் இன்னும் இரண்டு மூன்று வருடங்களுட் சந்திக்கும்" என்றான். பறுவதம் இதனல் மனந் தேறியவளாய், அச் சந்நியாசிமீது நம்பிக்கைகொண்டவளாய், அவரை அங்கே போசனஞ் செய்யும்படி கேட்க, அவரும் ஒருவாறு உடன்பட்டுப் போசனஞ் செய்தார். செல்வன்வீட்டுப் போசனமல்லவா, திருடனுக்குப் போசனம் மிகவும் உவப்பாக இருந்தது. உணவுண்டபின், உண்ட இளைப்பு தொண்டருக்கும் உண்டல்லவா? சந்நியாசியார் சிறிது ஆயாசந்தீர்க்கும்படி தலைவாசலில், பறுவதம ஒரு மான்றோலைக் கொண்டுபோய் இட்டாள். அவர் அதன்மீது படுத்துக் கொண்டு "ஆ! ஆ! இந்த இடம் கைலாயம போல் இருக்கிறது" என்றார்.

* * *

மௌட்டிகமுள்ள பறுவதத்திற்கு அந்தக் கைலாயம என்ற சொல்லைக் கேட்டாற் போதாதா? பறுவதம் ஓடிவந்தாள்; சந்நியாசியாரைப் பஞ்சாங்கமாக வீழ்ந்து கும்பிட்டாள்; "சுவாமி, பெரியவரே புண்ணியவானே, கைலாசம போல் இருக்கிறதென்று சொன்னீர்களே, நீங்கள் எப்போதாயினும் கைலாசம் போனதுண்டோ? அடியாட்குச் சொல்லியருளல்வேண்டும்' என்று கண்ணீர் இரந்து கேட்டாள். "ஏ, தாய்! கைலாயத்திற்கு ஒருமுறை இருமுறையல்ல, பல முறை போயிருக்கிறேன்; இற்றைக்கு இரண்டுவாரங்கட்கு முன்னித்தான் அங்கிருந்து வந்தேன்; கைலாயம் போவதும் வருவதும எங்களைப்போன்ற துறவிகளுக்கு ஒரு பெரியகாரியமல்ல; அம்மம்ம! அந்தக் கைலாயத்தின் காட்சியென்ன! சிறப்பென்ன! அங்கே போனவர்களுக்கு மீண்டு இங்கே வர மனம வருமா? என்ன செய்யலாம்; நாம் வராமற் கைலாயத்திலேயே தங்கிவிட்டால், என் சீடர்கள் கவலைப்படுவார்கள்; அதற்காக வல்லவா நாம் இந்த மண்ணுலகத்திற்கு இடையிடையே மீண்டு வரவேண்டி யிருக்கிறது;………" என்று இப்படிக் கூறும்போது சந்நியாசியார் அக் கைலாசக்காட்சியிலே மனம் ஈடுபடத் தம்மை மறந்து பரவசமாய்த் தியானத்தில் இருக்கலாயினர்.

* * *

சிலமணிநேரஞ் சென்ற பின்பே சாமியாருக்குப் பூலோகத்து அறிவு வந்தது. "ஏ, அம்மா, என்ன கேட்கிறீர்" எனலும், பறுவதம் "சுவாமி, நான் ஒரு பாவி; என்னை இங்கிருந்து கலங்கவிட்டு என் இராசாத்தி கைலாசம் போய்விட்டாள்; போனவள் இன்றுவரையில் மீண்டு வந்தாளல்லள்; அவளைச் சுவாமி! கைலாயத்திலே எப்போதாயினுங் கண்டதுண்டோ………" என்று கேட்டாள். "அம்மா, அப்படி எவளையும் பார்த்த ஞாபகமில்லை; அந்தப் பெண்ணுக்கு வயசு என்ன இருக்கும்? அவள் நாமம் என்ன? அப்பெண்ணினைப்பற்றிய குறிப்பு ஏதும் சொல்ல முடியுமா?……" என்று இப்படிப் பல கேள்விகளைச் சந்நியாசி கேட்டார். "சுவாமி, அவள் வயதில் எனக்கு மெத்த இளமை; அழகில் என் பிள்ளைக்குச் சரியான பெண்கள் ஒருவரும் இல்லையெனலாம்; கைலாசத்திற்குப் போகும்போது 13 வயசு கடந்தது; பிள்ளையின் எழுத்துப் பெயர் பங்கஜவல்லியம்மாள்; நாங்கள் பங்கஜம் என்று சொல்லிக்கொள்வது; ஒரே யொருமகள்……" என்று சொல்லி அப்பாற் சொல்ல முடியாதவளாய் பறுவதம் அழுதாள். "தாயே நீ கவலைப்பட வேண்டாம்; பங்கஜம் என்ற பேருள்ள ஒரு சிறு பெண்ணைக் கைலாசத்திலே பார்த்த ஞாபகம் இருக்கிறது; சிறிது யோசித்துப் பார்த்துச் சொல்லுகிறேன்" என்றான் திருட்டுச் சந்நியாசி.

(வரும்)

குழந்தைகளை விற்றுப் பசியாறும் பெற்றோர்

மத்தியமாகாணத்தில் ஒரு ரூபாய்க்கு ஒரு குழந்தை

ஜப்பல்புரி ஜூன் 15—

மத்தியமாகாணத்தைச் சேர்ந்த பேத்தூல் என்ற பகுதியில் பஞ்சமும், வேலையில்லாத் திண்டாட்டமும் பெரும் வறுமையை உண்டுபண்ணிப் பெற்றோர்களே தங்கள் குழந்தைகளை ஒருவேளைச் சோற்றுக்காக விற்றுவிடுகின்றனர். பாட்கடன் என்ற கிராமத்தில் ஒரு மனிதர் 8 நாள் ஒரு சிறு ரொட்டித்துண்டும் கிடைக்காமல் பட்டினி கிடந்த பின் 9ம் நாள் ஒரு தர்மவானல் ஒரு கூடை தானியமளிக்கப்பெற்றார். ஆனல் அந்த மனிதர் அவ்வளவு தானியத்தைக் கண்டதும் அதை மாவரைத்து ரொட்டி சுடுமுன் பசியின் கொடுமையால் உயிர் துறந்தார். டூடியா என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒரு ஸ்திரீ பசிக்கொடுமை பொறுக்க முடியாமல் தான்பெற்றஒருசிறுகுழந்தையை ஸ்டேஷன் மாஸ்டரிடம் ஒரு ரூபாய்க்கு விற்றுவிட்டாள். இத்தகைய பஞ்சம் அங்கு ஏற்படுவதற்குக் காரணம் சமீபத்தில் அங்கடித்த பெரும் புயலானது வயலின் விளைச்சல்களையெல்லாம் பாழ்படுத்திவிட்டதேயாம்.

அபிஸீனிய சக்கரவர்த்தியும் சர்வதேச மகாநாடும்

அபிஸீனிய சக்கரவர்த்தி பிருத்தானிய அக்கிராசனாதிபதி மந்திரியுடன் யோசித்துக்கொண்டு ஜெனிவாவில் நடக்கவிருக்கும சர்வதேச சங்கக் கூட்டத்திற்குத் தாம் நேரிற்சென்று தமக்கு நேர்ந்த குறைகளை முறையிட நிச்சயித் திருக்கின்றாராம். அபிஸீனியாநாடு இப்பொழுதும் சுவாதீனத்தோடுதான் இருக்கின்றதென்பதும் பழைய பூரண சுவாதீனத்தைப் பெறும விஷயத்திற் சர்வதேச சங்கம் தமக்கு இயன்ற துணைபுரியக் கடமைப்பட்டிருக்கின்றதென்பதுமே சக்கரவர்த்தியின் கொள்கை.

ஜீவப் பர சாகரன்

இயற்றியவர்

மாசிலாமணி—சிவதாசன்

திருக்கோணமலை

பிழைதிருத்தம்

(சென்ற குருவாரம் வெளியாய இந்துசாதனத்தில், "ஜீவப் பர சாகரன்" என்னும் எனது நாவலின் இரண்டாம் அத்தியாயத்தில், "அடுத்தநாள் புதன்கிழமை" என்று தொடங்கப்பெற்றதை, "அடுத்தநாள் வெள்ளிக்கிழமை" எனத் திருத்திக் கொள்ளவும்.)

அத்தியாயம் 4

வழக்கம்போல் காலை 8-30 மணியளவில் கலாசாலை ஆரம்பித்தது. பரத்தையும், சாகரனையும் தவிர ஏனைய மாணவர்கள் எல்லோரும் கலாசாலையை யடைந்தனர். முன்கூறிய நண்பர்களிருவரும் பின்வருமாறு சம்பாஷித்துக்கொண்டு கலாசாலையை நோக்கி வரலாயினர்.

பரம்: சாகரா! என்னே நாமெடுத்த தந்திரங்களெல்லாம் பாழாய் விட்டனவே?

சாகரன்: நண்ப! தந்திரங்களைவிடுத்து மந்திரங்களினால் எம் வேலையை முடிப்போம்.

பரம்: அது எங்ஙனம் நண்பா!

சாகரன்: எனது தகப்பனாரின் நண்பராய, ஞானம்மான் என்றொருவர் இருக்கின்றார். அவர் மாந்திரீகத்தில் மிகவும் கீர்த்தி வாய்ந்தவர். அவரிடத்தில் இவ்விஷயத்தைத் தெரிவிப்போமாகில், அவர் அதற்குத் தகுந்தவண்ணம், ஜீவத்தை மந்திரத்தால் மரணமடையச் செய்வார். பின் நம் எண்ணம் பலித்துவிடும்.

பரம்: அங்ஙனமாயின், கலாசாலையிலிருந்து போகும்போது ஞானம்மானைக் காணுவோம்.

இங்ஙனம் இருவரும் சம்பாஷித்துக்கொண்டு கலாசாலையுள் புகுந்தனர். இவர்களைக்கண்ட முடச் சட்டம்பியாராகிய பூபாலபிள்ளை, ஆவேசங்கொண்ட சர்ப்பம் போலச் சீறியெழுந்து, "ஏன் சுணங்கினீர்கள்? எங்கு சென்றீர்கள்? சீக்கிரம் கூறுங்கள்," என வினவினர். நண்பர்களிருவரும், நடுக்கமுற்றுப், பதைபதைத்துத் தத்தளித்து ஒன்றும் பேசாது நின்றனர். உபாத்தியாயரும் அவர்கள்மீது மனமிரங்கி மன்னித்தார். முன்கூறியபடி நண்பர்களிருவரும், மந்திரத்தால் ஜீவத்திற்குக் கேடுசெய்ய முயன்றும பயன்படவில்லை. இதனால் அவர்கள் மிகவும் விசனமுற்றுக் கல்வியில் காலத்தைக் கழிக்காது, தம் வாழ்நாட்களையும் இத் தீச்செயல்களிலேயே கழித்தமையால் பரீட்சைகள் ஒன்றிலும் சித்தியடையவில்லை

ஜீவமோ, நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாய், கல்வியில் ஊக்கங்கொண்டு, பலகலைகளையுங் கற்றுப், பரீட்சைகளில் தேறினன்.

இவ்விளைஞனுக்கு வயது 20 ஆனதும் அவனது தாய்தந்தையர்கள் இறந்துபோயினர். பாவம்! அவனது சுற்றத்தார்களும் அரோகிகளாயினர். அவன் சிறிய தந்தையாகிய மகேந்திரன் அவனது காசைக் கைப்பற்றிக் கொண்டு, காட்டை விட்டுத் துரத்திவிட்டனன். அருமற்ற பாவியான ஜீவம் என்ன செய்வான்? தன் வாழ்நாட்களை எங்ஙனங் கழிக்கப்போகின்றான். அப்பொழுது அவனுக்கோர் யுக்தி தோன்றிற்று அது யாதோவெனில் தன் பொருள் பூமி பண்டம் யாவையும் விற்கும நோக்கங் கொண்டான்

அவ்வூர் வாசியாகிய மகாலிங்கச் செட்டியார் என்பார், இவற்றை யறிந்து அவ்விளைஞனை வரவழைத்து அவனது கல்வியறிவையும் நற்குணத்தையும் மெச்சித் தன்னிடத்தில் ஒரு குமாஸ்தாவாக அமர்த்துதற்கு எத்தனஞ் செய்தார். ஜீவம் இவ்விஷயத்தையறிந்ததும், செட்டியாரின் எண்ணத்திற்கு மாறாக அபிப்பிராயந் தெரிவித்தான். செட்டியார் தன்னால் இயன்றளவு கெண்டித்தும், இளைஞன் அதற்கு இடங்கொடாததை நினைத்து மிகவும் துக்கித்தார். இளைஞன், செட்டியாரவர்களை நோக்கி, "ஐயா! உமக்கு விருப்பமுண்டேல் இப்பொருள் பூமி யாவற்றையும் பெற்றுக்கொண்டு பணத்தைக்கொடும். இல்லையேல் நான் சொல்வதற் குத்தரமளியும்" என்றான்.

செட்டியார்: தம்பி! கோபிக்க வேண்டாம். உமது நன்மையை விரும்பியே அத் தொழிலை உமக்குத்தர உத்தேசித்தேன். ஆனால் நீர் அதற்கு விருப்பப்படுகிறீரில்லை. பின் நீர் உமது ஜீவியத்தை எங்ஙனம் கழிக்கப் போகிறீர்?

ஜீவம்: பிற ஊர் சென்று ஏதாவதொரு வர்த்தகம் பார்க்கும் நோக்கங் கொண்டிருக்கின்றேன்.

செட்டியார்: அங்ஙனமாயின் நீர் என்னுடன் சின்னாட்களிருந்து வர்த்தகத் தொழிலைக் கற்றபின், உமதெண்ணம்போற்செய்யலாம். சுருங்கக்கூறில் என்னுடன் கூட்டு வியாபாரம் செய்யும்படி உம்மைக் கேட்கிறேன்.

ஜீவம்: அங்ஙனமாயின் தங்கள் எண்ணம்போல் யான் இவ்விடம் சின்னாட்கள் தங்கி வர்த்தகத் தொழிலைக் கற்றபின் புறப்பட உத்தேசிக்கிறேன். ஆனால் என் பொருட்களுக்குத் தரும் பணத்திற்குச் சீட்டெழுதித் தரும்படி தங்களை வேண்டுகின்றேன்.

செட்டியார்: தம்பி! நீர் எனது எண்ணத்திற்கு உடன்பட்டமை பற்றி நான் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆனால் சீட்டெழுதுவது அவசியமாயின் எனக்கோர் தடையும் இல்லை.

ஜீவம்: ஐயா! அதைப்பற்றிக் குறை நினைக்க வேண்டாம். அங்ஙனஞ் செய்வதே நலம் போல் தோன்றுகின்றது.

செட்டியார்: சரி; இதோ சீட்டெழுதுகிறேன் தம்பி! நாம் சீட்டெழுது முன் உம்மிடத்தில் ஓர்விஷயமறிய விரும்புகிறேன். அது யாதெனின், உமக்கு எழுத வாசிக்கத் தெரியுமா?

ஜீவம்: தெரியாது. ஆனால் கையொப்பமிடுவேன்.

செட்டியார்: மிகவும் நல்லது. இச் சீட்டில் குறிட்ட இடத்தில் உமது கையொப்பத்தை இடவும்.

சீட்டு

உலகமறியாத ௵ ஒருவருங்காணாத ௴ ஒருநாளுமிலாத தேதியில், ஊர் இல்லாத ஊரிலிருக்கும், கறுப்பண்ணன் முதலியார் குமாரன் வெள்ளையன் கெடியனுக்குச் சரிப்படாத ஊரிலிருக்கும் பித்தம் பிடித்த ஏப்பாண்டிச் செட்டியார் குமாரன் பேர் இல்லாதவன் புரட்டி எழுதும் பத்திரம் யாதெனில் மேற்படி வெள்ளையன் கெடியன் வேண்டிய பணம் (ரூபா 500) ஐஞ்ஞாற்றுக்கும், பத்துவித வட்டியிட்டுத் தரவேண்டும். தவறின் எந்தக் கோட்டிலாவது போட்டுக் கடற்கரையைச்சுற்றி உலாவி வரும்படி வேண்டுகின்றேன்.

சாட்சி

இவனே.
அவனே.
எழுதினவனே.

கடவீதி காசபணஞ்செட்டி.

ஜீவம்: (சீட்டை வாசித்துச் சிரித்து விட்டுச் செட்டியாரைப் பார்த்து ஆ! ஆ!! செட்டியே! செட்டி! நீர் புத்தியில் மட்டியே! மட்டி!

செட்டியார்: ஏன் அப்படிச்சொல்லுகிறீர்?

ஜீவம்: எனக்கு எழுத வாசிக்கத் தெரியாது, ஆனால் கையொப்பமிடுவேன் எனக் கூறியபொழுது கையொப்பமிடும் எனக்கு எழுத வாசிக்கத் தெரியுமென்பதை நீர் யோசிக்கவில்லையே. நான் என்னைக் குமாஸ்தாவாக உம்மிடத்திலமரும்படி வேண்டியது எனது கல்வியறிவை மெச்சியல்லவா? அத்துடன் நானோ ஓர் பெருங் குடும்பத்திலுதித்தவன். அக்கதைய எனக்குக் கல்வியறிவு இருக்கிறதா? இல்லையா? என்பதையேனுஞ் சிந்திக்க வில்லையா? நீர் என்னை ஏமாற்ற நினைத்தீர் போலும்.

செட்டியார்: தம்பி! உம்மைப் பரிசோதிக்கும் நோக்கமாகவே செய்தேன்.

ஜீவம்: செட்டியாரே! நீர் விழுந்தும மீசையில் மண் ஒட்டவில்லை என்கிறீரே. நீர் என்னை ஏமாற்ற முயன்றது போல் இன்னுமொருவரை ஏமாற்ற முயலவேண்டாம். "பலநாட்கள்வன் ஒரு நாளைக்கு அகப்படுவான்" என்பது முதுமொழியல்லவா? ஈற்றிலுமது கெதியென்ன? பல நாட்களாய்ச் சேகரித்தபொருள்கள் ஒருநாளிற் போய்விடும்.

இங்ஙன மிருவரும் வாதிக்கும் போது ஓர் சேவகன் செட்டியாரின் கடையை நோக்கி வரலாயினன்.

அத்தியாயம் 5

சேவகன்: இதுதானா மகாலிங்கச் செட்டியாரின் இல்லம்?

ஜீவம்: ஆம்

சேவகன்: செட்டியார்! செட்டியார்!

செட்டியார்: யாரது? (என்று வினாவி வெளியில வந்தார்)

சேவகன்: இவ்வூரில் வர்த்தகத் தொழில் பார்க்கும் கணபதிப் பிள்ளை என்பவரிடம், நீர் ரூபா 100 பற்றிக் கொண்டு, கள்ளச் சீட்டெழுதியதாக உம்மீது வழக்குத் தொடரப் பட்டிருக்கின்றது. ஆதலால் இவ்வழைப்புக் கட்டளையுடன் உம்மை நீதிஸ்தலத்தில் வந்து காணும்படி நீதிபதி கட்டளை இட்டிருக்கின்றனர்.

செட்டியார்: நானோ பெருந் தனவந்தன். என்னிடமுள்ள பொருள் பூமிகள் உங்கள் நீதிபதியிடம் இல்லை. ஆகலால் அவர் என்னை வந்து காணுவதல்லால் நான் அவரிடஞ் செல்லேன்.

ஜீவம்: செட்டியாரே! நீர் ஊரவர்கள் வாயில் மண்போட்டது மல்லாது வீரமுங் கூறுகின்றீரே.

சேவகன்: தம்பி! நீரும் இவர் பொறியில் அகப்பட்டு விட்டீர் போல் தோற்றுகின்றது.

ஜீவம்: இதோ இச் சீட்டை வாசித்துப் பாரும்.

சேவகன்: (சீட்டை வாசித்துவிட்டு) தம்பி! நீர் இவரைச் சும்மா விடுவது அழகல்ல. இந்நுள்ள ஏழைகளையும் இவர் இங்ஙனமே ஏமாற்றியுள்ளார். ஆகலால் நீரும் இவர் மீது வழக்குத் தொடர்வதே புகதியாகும்.

செட்டியார்: (கோபம் கொண்ட சர்ப்பம் போலச் சீறியெழுந்து) யாரையடா அங்ஙனம் கூறினை? நீ இன்னு மிங்கே நிற்பாயானால் உன் னுயிர்க்குச் சேதம் வரும்

ஜீவம்: ஐயாசெட்டியாரே! நீர் அவர் மீது ஏன் வீணாய்க் குறை கூறுகின்றீர்?

செட்டியார்: ஓ! ஓ!! "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி பொக்க" நீரும் துள்ளுகிறீரா? வீணாய் என்மீது வாதுக்கு வருவீர்களேல், உங்களை எமலோகத்துக்கு அனுப்புவேன். ஜாக்கிரதை.

ஜீவம்: இஃதென்னே? கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டாற் போல ஆயிற்றே. செட்டியாரே! நானோ அருமற்ற பாவி என்னை வீணாய்த் தொல்லைக்குட் படுத்துவீரேல் கடவுள் உம்மைத் தண்டிப்பவர்.

சேவகன்: கடவுள் தண்டிக்கு முன் எமது துரையாண்டவர் தண்டிக்கப் போகின்றார். அதே மேலான தண்டனை.

செட்டியார்: (பின்பும் கோபமுற்று) என்னடா சொல்கின்றாய்? இதோ வல்லபமுண்டேல் தப்பிக்கொள் (என்றுகூறி ஓர் கோலால் சேவகனது மண்டையில் அறைந்தான் சேவகனுக்குச் சிறு காயமேற்பட்டது. அவன் ஜீவத்தையும் அழைத்துக் கொண்டு பொலிஸ் தாணத்தை அடைந்தான். அங்கே முறைப்பாடு கொடுத்தபின், செட்டியார்மீது முந்திய வழக்கோடு இன்னும் இரு வழக்குகள் தொடரப் பட்டன அதாவது சேவகனுக்குக் காயம் விளைத்ததாகவும் ஜீவத்திற்குக் கள்ளச் சீட்டு எழுதியதாகவும் அவர் குற்றஞ்சாட்டப்பட்டார். மறுநாள் செட்டியாருக்கு விலங்கிடப்பட்டு நீதிஸ்தலத்திற்குக் கொண்டு வரப்பட்டார். வீரம் நிறைந்த தோற்றமும் நீடிய உருவமும், ஆவேச முகமும் முறுக்கிய மீசையும் உடைய நீதிபதியைக் கண்ட செட்டியார் தன் ஐம்புலன்களையும் ஒடுக்கி நடுக்கமுற்றார்.

நீதிபதி சேவகனை அழைத்து முறைப்பாடெழுதினர். அதன்பின் ஜீவமுந் தன் முறைப் பாட்டைக் கொடுத்தான். செட்டியார் நீதிபதி முன் வந்ததும் கால் நடுக்கமுற்றுக் கீழே விழுந்தார்.

நீதிபதி: ஓய் செட்டியாரே! உமது தமாஷைக் காட்டுவதற்கு இது இடமல்ல. இப்போது நான் கேட்குங் கேள்விகட்கு விடை பகரும். நீர் குற்றவாளியா? அல்லவா?

செட்டியார்: அதைப்பற்றி நீதிபதிக்கே தெரிய வேண்டும்.

நீதிபதி: நீர் சேவகனுடனும் ஜீவம் என்பவருடனும் சண்டையிட்டது ஏன்?

செட்டியார்: அதைப்பற்றி அவர்களே நல்ல விபரமாய்ச் சொல்லியிருப்பார்களே!

நீதிபதி: ஓய் செட்டியாரே! வினாக்களுக்குச் சரியான விடைகள் கொடுக்காவிடின், உமக்குப்பெருந் தண்டனை விதிப்பேன்.

செட்டியார்: (பயமுற்று) எ. எ. என்மேல்தான்—

நீதிபதி: உம்மேல் என்ன?

செட்டியார்: சட்டையும், சால்வையும்.

நீதிபதி. (கோபமுற்று) சேவகா! இவனையழைத்துச்சென்று நன்கு நீண்ட சவுக்கினால் உன் ஆசை தீருமளவும் அடி.

செட்டியார்: ஐ........யா! துரையாண்டவ அஅரே! என்மேற்றான் எல்லாக்குற்றங்களும்.

நீதிபதி: சரி. உம்மீது மூன்று வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. அவை மூன்றிலும் நீரே குற்றவாளியெனத் தெரிகிறது. உமதுபெயர் மகாலிங்கமாயினும் மகாசிங்கமென அழைப்பதே நலமாகும். நீர் கள்ளச் சீட்டெழுதிக் குடிகளின் வாயில் மண்போடுகிறீரே. இது ஏற்குமா? காட்டில்வாழும் சிங்கமபோன்ற மகாசிங்கமாகிய நீர் நாட்டில் வளர்ந்தாலென்னாகும்? இன்னும் நாட்செல்ல நீர் குடிமக்களையுஞ் சாப்பிட்டுவிடுவீர்போலத் தோற்றுகின்றது. ஆதலால் நீர் எழுதிய கள்ளச்சீட்டு இரண்டிற்கும் உமக்கு இரு வருடக்கடுஞ்சிறையும், அரசாங்க சேவகனுக்குக் காயம் விளைத்ததற்கு ரூபா 50/ அபராதமும் விதிக்கின்றேன். மேற்கூறிய பணத்தை அரசாங்கத்திற்குக் கொடுக்காவிடின், உமது பொருள் பூமி பண்டங்கள் யாவும் அரசாங்கத்தாரால் பறிமுதல் செய்யப்படும்.

இத் தீர்ப்பைக் கேள்வியுற்ற சேவகனுக்கு உண்டான சந்தோஷத்திற்கோ அளவில்லை. அவன் ஜீவத்தைநோக்கி, "தம்பி, ஜீவம்! என் சிரசில் காயம் விளைவித்த செட்டியை நீதிபதியவர்கள் என்னிடத்திற்றான் ஒப்புவிப்பர். நான் அவனுக்கு இரும்புக்காப்பிட்டு கழுத்தை அணியணிவித்து, கையிலிருக்கு மிக்கோலால் எனது ஆசை அடங்குமட்டும் அவன் மார்பில் இரண்டு மூன்று இடிகள் கொடுத்துச் செய்யவேண்டிய சித்திரவதைகளெல்லாஞ் செய்தே அவனைச் சிறைச்சாலைக்கழைத்துச் செல்வேன். இது உண்மை" எனக்கூறிச், செட்டியாரைப் பார்த்து, "செட்டியே! உன்னுயிர் இப்போது என்கையிற்றானிருக்கிறது. ஜாக்கிரதை"

இதைக் கேள்வியுற்ற ஜீவத்திற்கு விசாரம் உண்டாயிற்று. அவன் நீதிபதியை நோக்கி, "ஐயா துரையாண்டவரே! தாங்கள் செட்டியாருக்கு விதித்த கடுந்தண்டனை எனக்கு மிகவும் மனஸ்தாபத்தை யுண்டுபண்ணுகின்றது. ஆகலால் எனது வழக்கில் செட்டியாருக்கு விதித்த தண்டனையை விலக்கி விடும்படி தங்களை மன்றாட்டமாகக் கேட்கின்றேன்.

நீதிபதி: உம்மை இத்துஷ்டன் ஏமாற்றி இன்னும் உம்மிடம் பணம்பெற நினைத்திருக்க அவர் மீது கருணை வைக்கிறீர்?

ஜீவம்: ஐயா! "இன்னா செய்தாரை யொறுத்தலவர்நாண நன்னயஞ் செய்துவிடல்" என்பது நிருக்குறள் ஆகலால் தாங்கள் விதித்த தண்டனையைப்பார்க்கிலும் அதுவே சிறந்த தண்டனையாகும். சம்மதமில்லையேல, தங்கள் அபிப்பிராயம்போற் செய்க.

நீதிபதி: செட்டியார் உம்மை ஏமாற்றியதுமல்லாது, மற்றும் பலரையும் இவ்வாறே ஏமாற்றியுள்ளார். ஆகலால் இத்தண்டனையே அவருக்குத் தகுந்தது.

செட்டியார். ஐயா! துரையாண்டவரே! எனக்கு விலங்கிட்டுச் சிறைச்சாலைக்கழைத்துச் செல்லும் வழியில், மிகவும் சித்திரவதை செய்வாரென இச் சேவகன் வீரங்கூறுகின்றார். ஆகலால் ஐயாவே! தங்களையும் என்னுடன் சிறைச்சாலைக்கு வரும்படி மன்றாட்டமாகக் கேட்கின்றேன்.

நீதிபதி: (சிரித்துவிட்டு) சேவகா! செட்டியாரை ஒன்றுஞ் செய்யாது இப்பொழுதே சிறைச்சாலைக்கழைத்துச் செல்வாயாக.

சேவகன்: அப்படியே செய்கின்றேன்.

செட்டியார்: துரையே! தங்கள் விலாசத்தை எனக்குக்கொடுத்தால் தங்களின் சுகத்தைக் கடிதமூலமாக அறிந்துகொள்வேனல்லவா?

நீதிபதி: (பின்பும் சிரித்துவிட்டு) எனது சுகத்தைபற்றிய ஆவல் கொண்ட உமக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உமக்கு நானே முதற் கடிதமெழுதுவேன். அதிலென் விலாசத்தையுங் குறித்தனுப்புவேன்.

செட்டியார். சரி ஐயா! சலாம் துரை!

நீதிபதி: (சிரித்துக்கொண்டு) சலாம் சலாம்!

சேவகன்: செட்டியாரே! வாரும்! வாரும்!! என்கையிற்றான பாசக்கயிறு.

செட்டியார்: எனக்கு ஏதேனும் சித்திரவதை செய்வாயானால் துரையாண்டவருக்குக் கடித மூலமாக அறிவிப்பேன்.

இவ்வண்ணம் சேவகனும், செட்டியாரும், வாதித்துக் கொண்டு சிறைச்சாலையை நோக்கிச் சென்றனர். நீதிபதியவர்கள் ஜீவத்தைத் தம் மோட்டாரில் ஏற்றி வீட்டிற்கழைத்துச்சென்றார்.

தொடரும்.

சாராயப்போத்தல் பறிமுதல்

மல்லாகம் பொலிஸ் கோட்டில் சென்ற கிழமை தொல்புரத்தில் வசிக்கும் K. நாகலிங்கம் அல்லது நாகேசு என்பவர் 91 போத்தல் சாராயம் வைத்திருந்தாரென அவர் மீது சங்கானை மதுப்பரிசோதகர் குற்றஞ்சாட்டி வழக்குத்தொடர்ந்தார். எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு நீதிபதி எதிரிக்கு ரூபா 150 அபராதம் விதித்ததோடு 246 ரூபா பெறுமதியான சாராயப் போத்தல்களையும் பறிமுதலாக்கினர்.

க. நி.

புதிய அதிகாரப் பட்டம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கியநாணயசங்கங்களின் காரியதரிசியாகிய 'காம்பல்' என்பவர் யாழ்ப்பாணம் ஐக்கியசங்க பத்திய வங்கியை ஸ்தாபிப்பதற்கு நமது அதிகாரமவர்கள் தமது யோசனைகளாலும் செல்வாக்காலும் பேருதவி செய்தனர். அந்த வங்கியே நமது நாட்டில் ஐக்கியநாணயசங்கத்தால் முதலில் ஸ்தாபிக்கப்பட்டதாகும். ஏழை விவசாயிகளுக்கு உற்றுழியுதவித் துணை புரியும் ஐக்கிய நாணய சங்கக் கொள்கைகள் இந்நாட்டிற் பரவிப் பயன்படுதற்குப் பிரயாசப்பட்டுழைத்து வழிகாட்டிய தீர்க்க புத்தியும் நிர்வாகசாதுரியமும் சான்ற எம் அதிகாரமவர்களுக்கு எங்கள் நாட்டவர்கள் எந்நன்றியாற்ற வல்லார்களோ?

பாமரர்க்கு உதவி

அதிகாரமவர்கள் அவ் வங்கியின் அத்தியக்ஷராக விருந்து இன்னும் அதன் கருமங்களைத் திறம்பட நடாத்தி வருகின்றார்கள். பொதுநலங்கருதி ஸ்தாபித்த வைத்தியசாலைகளும் ஏனைய தருமஸ்தாபனங்களும் நன்முயற்சிகளும் அதிகாரமவர்களது பேராதரவைத் தாராளமாகப் பெற்று வருகின்றன. பாமர ஜனங்களையுயர்த்தவும் தாழ்த்தப்பட்டோரை முன்னேற்றவும் அவர்கள் செய்யும் பிரயாசமும் தியாகமும் அளப்பில. அல்லற்பட்டோர்க்கும் ஏழைமக்களுக்கும் அன்னைபோலக் கசிந்துருகி உதவும் தயாளகுண தர்மிஷ்டர். கண்ணுங் கருத்துமாகக் கல்வியபிவிருத்திப் பொருட்டுழைப்பவர். எந்தக் கல்வி ஸ்தாபனமும் அவர் கைவரிசையை எளிதிற் பெறலாம். அவர்களது தாராள சிந்தையோடும் தர்மத்தோடும் ஏதோ ஒருவகையில் தொடர்பு படாத அறநிலையங்களுமில்லை. அவர்கள் தலைமை வகியாத சபைகளுமில்லை.

அதிகாரமவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அத்தியக்ஷராகவும் கந்தரோடை ஸ்கந்தவரோதய வித்தியாலயத்திற்கு எஜமானராகவும் இலங்கி, அவற்றைச்செவ்வனே பரிபாலனஞ் செய்து வருகின்றார்கள்.

அதிகாரப் பட்டம்

நமது அதிகாரமவர்கள் இராஜசபைகட்கும் பூஷணர்; ஏழைகள் எளிதிற் காண்பதற்கும் தர்ம பூஷணர்; அதிகாரிகளுக்கும் அன்புடை நண்பர்; நாட்டவருக்கு நற்றுணை; உத்தியோக ஸ்தானத்தும் வித்தகச் சிங்கம்; நமது தொழிற் றலைத்தாய கைசேர்ந்த உழவர்; அறிஞர்தங்கள் அவைகளில் அருஞ்சபாநாதர்; பொதுநலத் தொண்டரில் முதன்மைசால் சேவகர்; "பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம் நயனுடையான்கட் படின்" என்ற செல்வம் இவரது செல்வமே. வானுற வோங்கி மாண்புறத் தழைத்து நறுங்கனி படைத்து மன்னுயிர்க்கு நிழலு முணவுந் தந்து நீடூழி கிளைத்துச் செழித்து நிற்கும் ஆல விருக்ஷமே போல நாட்டிற்கு நற்றுணையாய இப் பெருந் தகையார்க்குச் சக்கிரவர்த்தியார் மங்கள தினத்து அதிகாரமெனும் பட்டப்பெயர் சூட்டப்பட்டது. இப்பட்டம் அவர்கட்கோ நம்நாட்டினர் அனைவருக்குமே சூட்டியது போலாம். அதிகாரம் முன்னாள் வள்ளுவர் குறளையடைந்து சிறந்தது; இந்நாள் எமது பிரபுவை யடைந்து சிறந்தது.

நீடூழி வாழ்க

இழைகளுங் குழைகளு மின்ன
[முன்னமே
மழைபொரு கண்ணிணை மடந்தை
[மாரொடும்
பழகினவெனினு மிப்பாவை
[தோன்றலால்
அழகெனுமணியு மோரழகு
[பெற்றதே.

எனக்கம்பர் அணியின் மேல் வைத்துக் கூறியவாறு போல அதிகாரமெனும் பட்டம் முன்னர்ச் சிலரொடும் பழகி அவர்க்கழகு செய்தாயினும், இப்பொழுது நமது நாகநாதப் பிரபுவால் அழகு பெறுவ தென்ன லாபம். நமது அதிகாரமவர்கள் சர்வசௌபாக்கிய சம்பன்னராய்ப் பரோபகாரார்த்தமாக நீடூழி வாழும்படி எல்லாம் வல்ல இறைவனருள் புரிவாராக

அடைவு நகை விற்பனவு விளம்பரம்

1893 - ம் ஆண்டின் 8 - ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் பெ. அரு. மு. சி. முத்துச்சாமிச் செட்டியார் அன்பிரதர் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12 - ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1935 - ஆண்டு பிப்ரவரி மாதம்

நம்	வ.	ரூ	ச	பெயர் ஊர் நகைகளின் விபரம்
3533	2	10		வி. கந்தையா உடுவில் கல்தோடு சோடி 1
3 35	3	15		செ. சின்னத்துரை வண்மேற்கு நீலக்கல் மோதிரம் 1
3584	5	8		கா. பொன்னையா கொக்குவில் கல் டிம்பி பதக்கம் 1
3683	9	8		க. ராசகோபால் குட்செட் ரோட் கல் தோடு சோடி 1
3719	10	10		அ. அம்பலவாணர் சின்னக்கடை கிளாவர் மோதிரம் 1
3827	15	37		வ. சிவஞானமுதலியார் திருநெல்வேலி கல்புரோச் 1 கல்சவுதகோர் 1
3868	17	16		க. துரையப்பா மனோகரா ரயில்வேஸ்டேசன் குண்டுவைத்த முழுப்பவுண் 1
3940	19	75		சி. முருகேசு பரங்கித்தெரு முத்துப் பச்சைக்கல் கட்டிய பென்னுடன் அட்டியல் 1
3970	20	138	50	ச. ராசையா கொக்குவில் செட்டிப்பூரான் அட்டியல் 1 கல் டிம்பிப் பதக்கம் 1
3976	21	25		அ. தம்பிப்பிள்ளை நவாலி சிகில் மோதிரம் 1 பின்கோர்க்கி 1 அரைக்கால் டாலர் 1
4086	25	130		சி. ரெத்தினம் நல்லூர் கல் பதக்கத்துடன் செட்டிப்பூரானட்டியல் 1
4095	25	100		வ. சுப்பையா தாவடி கல் பதக்கத்துடன் முறிச்சிக்குத்தி அட்டியல் 1
4133	27	15		சி. நடராசா கோண்டாவில் கைச்சங்கிலி 1
4139	27	90		பொ. பழனிவேல் இணுவில் கற்பதக்கத்துடன் முறிச்சக்குத்தி அட்டியல் I

1935 ம் ஆ. மார்ச்சு மீ

நம்	வ.	ரூ	ச	பெயர் ஊர் நகைகளின் விபரம்
4204	2	35		க. மு. செல்லப்பா நல்லூர் சிகப்புக்கல் தோடு சோடி 1
4220	3	15		மு. கிருஷ்ணசாமி பரங்கித்தெரு முறுக்குக்காப்பு சோடி 1
4286	6	18		த. தில்லையம்பலம் நல்லூர் சவுதகோர் 1
4332	9	35		வ. தருமலிங்கம் மல்லாகம் நெல்லுக்காப்பு சோடி 1
4366	11	420		ச. மு. சண்முகநாதன் செட்டியார் வண்மேற்கு பதக்கத்துடன் செட்டிப் பூரானட்டியல் 1 சாட்டுக்கொடி 1 நீலக்கல் மோதிரம் 2 சிகப்பு வெள்ளை கட்டிய மோதிரம் 2 உலாந்தாவைரம் கட்டிய கடுக்கன் 2
4476	16	15		இ. சின்னலிங்கம் வண்கிழக்கு கல் டிம்பிப்பதக்கம் 1
4499	18	15		வ. ராசரெத்தினம் ஆஸ்பத்திரிரோட் மூக்கில்வளையல் காப்பு 1
4514	18	60		க. நடராசா பெருமாள் கோவிலடி கல் பதக்கத்துடன் பட்டம் வெட்டிய அட்டியல் 1
4512	19	10		கா. ஆறுமுகம் சோனகதெரு கல் அட்சரக்கூடு 1
4545	20	10		வ. ஆறுமுகம் கீர்வேலி கல் டிம்பிப் பதக்கம் 1
4696	27	9		வி. பொன்னையா திருநெல்வேலி கிளாவர் மோதிரம் 1
4714	28	8		ச. கனகசபை திருநெல்வேலி சிகில்மோதிரம் 1
4734	29	12		க. பரமலிங்கம் கந்தரோடை ஆடுதன்மோதிரம் 1 கிளாவர்மோதிரம் 1
4766	30	58		அ. குழந்தைவேலுச் செட்டியார் வண்கிழக்கு சங்கிலி 1

விற்பனவு தாது வருடம் ஆனி மாசம் 30 ந் திகதி (13-7-36) திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்டவைகளை நீக்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்
லொர்தீன்மேன்தர்.

Mis 60 25 & 29-6-36

குஜரான்வாலாவில் மூன்று கொலைகள்

கணவனை இழந்த பெண்ணின் தீரம்

குஜரான்வாலா, ஜூன் 14—

குஜரான் வாலாவுக்கு அடுத்த சக்திபுரம் என்ற கிராமத்தில், நடந்த மூன்று கொலைகளைப்பற்றிய விவரம் இப்போது கிடைத்திருக்கிறது.

சமீபத்தில் கலியாணம் செய்து கொண்ட தம்பதிகள் இருவர் தஸ்கா என்றவிடத்திலிருந்து குஜரான்வாலாவுக்குப் புறப்பட்டனர். வழியில் [illegible] நகருகில் ஒரு மரத்தடியில் அவர்கள் சற்றுத் தங்கினர். மனைவி ஜலம் வேண்டியதால் புருஷன் ஜலம் கொண்டுவர ஒரு கிணற்றண்டை சென்றான். அங்கு குடம் ஒன்று இல்லாமையால் அடுத்திருந்த வீட்டுக்குள் நுழைந்து குடம் கேட்கச்சென்றான். இவன் உள்ளே நுழைந்ததும் இவனது தலை துண்டிக்கப்பட்டது. இவன் அணிந்திருந்த சில நகைகளுக்காகக் கொலை நடந்ததாகச் சொல்லப்படுகிறது. புருஷன் சென்று அதிக நேரமாகியும் திரும்பாமையால் மனைவியும் புறப்பட்டுச் சென்று அந்த வீட்டில் புருஷன் ரத்தவெள்ளத்திற் பிணமாகக் கிடந்ததைக் கண்டு திடுக்கிட்டாள். உடனே அவள் கதவை உட்புறம் தாளிட்டுக் கொண்டாள். கிணற்றருகிலிருந்தவர்கள் கதவைத் திறக்கும்படி எவ்வளவோ வேண்டிக்கொண்டும் அவள் திறக்கவில்லை. அதன் மேல் அவர்களிலொருவர் சுவரைத் துளைத்து உள்ளே சென்றார். இந்த ஸ்திரீ தனது கணவன் வெட்டுண்ட கத்தியால் அவரை வெட்டிவிட்டாள். மற்றொருவர் பிறகு நுழைய அவரும் அக்கதிக்கு ஆளானார். அதன் பின் ஸ்திரீ கூக்குரலிட கிராமவாசிகள் அங்கு வந்தனர். போலீசாரை அழைத்துக் காட்டினார்கள். போலீசார் மூன்று பிரேதங்களையும் பரிசோதனைக்கு அனுப்பினார்கள். விசாரணை நடந்து வருகிறது.

சௌம்யேந்திரநாத தாகூர்

ராஜத்துவேஷக் குற்றத்திற்காகக் கைதியானார்

பம்பாய் ஜூன் 16—

கவி ரவீந்திரநாத தாகூரின் சகோதரர் பிள்ளை சௌம்யேந்திரநாத தாகூர் இன்று பம்பாய் சீப் பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டதில் 124ஏ பிரிவுப்படி கல்கத்தாவில் விசாரணைக்குக் கொண்டு போகப்படுமாறு அவர் உத்தரவிட்டார்.

கல்கத்தா சீப் பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட் பிறப்பித்த வாரண்டின் பேரில் நேற்று ஸ்ரீமான் ஜி. பி. ஹதிஸிங் வீட்டில் சௌம்யேந்திரநாத தாகூர் கைதுசெய்யப்பட்டார். ஜாமீன் மனு நிராகரிக்கப்பட்டுவிட்டது

— —

மாண்டவன் மீண்டான்

மழை செய்த உதவி

பகல்பூர், ஜூன் 15—

பால்பூருக்கருகில் கோடு சிங் என்ற ஒருவர் இறந்துவிட்டதால் அவரைத் தகனம் செய்வதற்கு எடுத்துச் செல்லுகையில் வழியில் மழை பலமாகப் பிடித்துக்கொண்டது. அதனால் பிரேதத்தை ஒரு ஆலயத்தருகில் இறக்கினர். பிரேதம் நன்றாக நனைந்தது. அதன் பின் பிரேதம் உயிர்பெற்றது. ஆனால் அடுத்த நாள் மீண்டும் உயிர் போய் விட்டது.

ஜால்பைகுரியில் பூகம்பம்

ஆறு விநாடி அதிர்ச்சி

கல்கத்தா, ஜூன் 18—

ஜால்பைகுரி என்றவிடத்தில் இரவு 8.45 மணிக்கு பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டது. ஆறுவிநாடி நேரம் அதிர்ச்சி நீடித்தது. ஆனால் சேத மொன்று மேற்பட்டதாகத் தகவல் கிடைக்கவில்லை. பூகம்ப அதிர்ச்சி மட்டும் பலமாகத்தானிருந்தது.

ஆரோக்கிய லேகியம்.
சிறந்த மலசுத்தி ஔஷதம்.
மலபந்தமே உலகின் ஆரோக்கியத்துக்கு இடையூறாகும். ஆரோக்கிய லேகியம் சாப்பிடுவதால் தினசரி கிரமமாய் மலங்கழியும்; சோம்பல் நீங்கும்; தினசரி அலுவல்களுக்கு உற்சாகம் உண்டாகும்.
இன்னும் பித்தலாங்கிதம், நீருடன் மலமிதமாதல், உடம்பு இளைத்து வருதல், கை காலசதி, குடைச்சல், நீங்கும். பத்தியமில்லை.
20 ரூபா எடை டின் விலை ரூ. 2-0 தபால்செலவு சதம் 75.
நீரிழிவுக்கு.
அப்ரேக் செந்தூரம் கைகண்ட மருந்து.
பரீக்ஷை:—ஒரு மண் கலசத்தில் ஊசி நுழையும்படியான சிறிய துவாரங்கள் போட்டு அதில் ஜலம் விட்டு ஒழுகும்போது நமது அப்ரேக் செந்தூரம் ஒரு சிட்டிகை எடுத்துப் போட்டால் ஒழுகும் ஜலம் உடனே அடைபட்டுவிடும். அதேபோல் நீரிழிவில் அளவுமீறி ஓடிய நீரைக் குறைத்து நீரில் சர்க்கரை இருப்பது, தாகம் வரட்சி இவைகளைக் குணமாக்கும்.
20 நாள் மருந்து விலை ரூபா 12-50 சதம்.
ஸ்பெஷல் அனுபானம் சதாவாரி லேகியம் ரூபா 4-00.
தங்கபஸ்பம்.
தாதுபுஷ்டிக்கு ஓர் வரப்பிரசாதம்.
மெலிந்த தேகத்தைப் போஷித்து சரீரத்தில் புதியரத்தத்தை ஊறச்செய்து அளவற்ற பலம், ஆண்மை வீரிய விர்த்தி உண்டாக்கும். பத்தியமில்லை. (விபரமான கேட்லாக் இலவசம்.)
30 வேளை தங்கபஸ்பம் ரூபா 10. அனுபானம் லேகியம் ரூபா 2-50.
வெளிநாட்டார் ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.
தண்டபாணி வைத்தியசாலை, பழனி.
Q 19. 27-4 to 26 7-36 வி (Palni S. I.)

திருநெல்வேலி ஒற்றுமை நிதி,
(வரையுளது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திரூபா
25ம் ஆதாயமும்பெறலாம்
தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.
வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசீய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால்,
முதலை வளர்த்து வேலை பளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!
இலகுவான முறையில் இறக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
சேமதமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!!
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.
வ சோமசுந்தரம்,
காரியாதிகாரி.
(Y. 189. 1-11-35 to 31-10-36.) வி.

N.வைத்திலிங்கம்
& கம்பெனி
பெரியகடைத்தெரு,யாழ்ப்பாணம்.
கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள்·
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலியவிடங்களில்செய்யப்பட்டஉத்தரவாதமுள்ள
சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஷ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.
கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.
HEAD OFFICE:
38, 3rd Cross Street, Telephone No· 30·
Colombo
(Y. 47. 8-2 36—7-2-37) வி

பத்திரக் கிரயம்.

(முற்பணமாக அனுப்புதல் வேண்டும்.)

யாழ்ப்பாணப் பட்டினம்	தமிழ்	ஆங்கிலம்	இருபிரதிகளும்
	ரூ. ச.	ரூ. ச.	ரூ. ச.
(நகரசங்க எல்லைக்குட்பட)			
ஒருவருடத்திற்கு	5 - 00	5 - 00	9 - 00
½ வருடத்திற்கு	3 - 00	3 - 00	5 - 00
¼ வருடத்திற்கு	2 - 00	2 - 00	3 - 75
இலங்கை இந்தியா			
ஒருவருடத்திற்கு	8 - 00	8 - 00	12 - 00
½ வருடத்திற்கு	4 - 50	4 - 50	7 - 00
¼ வருடத்திற்கு	2 - 50	2 - 50	4 - 50
சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள்			
ஒருவருடத்திற்கு	9 - 00	9 - 00	13 - 00
½ வருடத்திற்கு	5 - 00	5 - 00	7 - 50
¼ வருடத்திற்கு	3 - 00	3 - 00	5 - 00

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-
ப. மு. ரா. முத்துச்சாமி செட்டியார்,
"நியூஸ் மார்ட்"
89. கோவில்தெரு,
கும்பனித்தெரு.

வெள்ளவத்தை மில்லில் செய்யப்படும் இலங்கா உற்பத்திச் சேலைகளையே வாங்குங்கள்!

அதனால், எப்போதும், மிகச் சிறந்ததும் மிக மலிவானதும் ஆகிய சேலைகளையும் உங்கள் வீட்டுத் தேவைகளுக்கு வேண்டிய எவ்வகைத் துணிகளையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம் என்பதை முற்றும் நம்புங்கள்

இலங்கையின் நாலுபக்கங்களிலும் நம்மிடம் வாடிக்கையாகப் புடவைகளை வாங்குவோர் பல்லாயிரக்கணக்கானோர் உளர்.

நமது புடவைகள் திறமானவையும் மலிவானவையும் என்பதற்கு அவை ஏராளமாக அழிவதே தக்க சான்றாகின்றது.

1936-ம் ஆண்டின் ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் என்னும்நான்கு மாதங்களிலும் பின்வருமாறு நமது புடவைகள் விலைப்பட்டிருக்கின்றன:—

வேட்டிகளும் சால்வைகளும் 1,95,467பீசுகள்; லாங்குளோத்ஸ் 62,777 யார்

சேலைகள் 1,9880 பீசுகள்; சேர்ட்டுகள் 1,10,931 யார்

டுவீல் துணிகள் 68,486 பீசுகள்; ஷீட்டுகள் 7,746 யார்

பெட்ஷீட்டுகள் 37,128 பீசுகள்; வேறுவகைத் துணிகள் 12,00,000 யார்

நம்மிடம் வாடிக்கையாகத் துணிகளை வாங்கி நம்மை ஆதரித்தவர்களுக்கு நாம் நன்றி செலுத்துவதோடு,

இன்னும் அவர்கள் அவ்வாறே ஆதரிப்பார்களெனவும் நம்புகின்றோம்.

சேலைகள்

பலவிதமானநிறங்களோடு கூடிய தூய வெண்ணிறச்சேலைகள்
விலைகள் தனித்தனி ரூபா 1-75 லிருந்து ரூ. 2-65வரை
யாருக்குத்தக்கபடி

பல்வேறு நிறங்களில் அழியாத சாயமுள்ள சேலைகள்
விலைகள் தனித்தனி ரூபா 2 லிருந்து ரூபா 2-90 வரை.
யாருக்குத்தக்கபடி

பல்வேறுநிறங்களில், பட்டுக்கரைகளையுடைய சேலைகள்
விலைகள் தனித்தனி ரூபா 1-50 லிருந்து ரூ. 2-50வரை.
யாருக்குத்தக்கபடி

பல்வேறு தினுசுகளில் பட்டுக்கரைச் சேலைகள்
விலைகள் தனித்தனி ரூபா 2-10 லிருந்து ரூ. 4-25வரை.
யாருக்குத் தக்கபடி

வேட்டிகள்

பட்டுக்கரை பிளீச்வேட்டி 50× 3½யார் தனித்தனி ரூ 1-45
„ „ 50× 4 யார் தனித்தனி ரூ. 1-55
ஷை வேட்டிகளுக்குப் பொருத்தமானபட்டுக்கரைச் சால்வைகள் 40×2½யார் தனித்தனி80சதவீதம்
பான்ஸிபிளீச்துட்டிகள் 40×3½யார் தனித்தனி ரூ.1-10 வீ
„ „ „ 46× 4யார் தனித்தனி ரூ 1-20வீதம்
அவற்றிற்குப் பொருத்தமான பான்ஸி சால்வைகள் 40× 2½யார் தனித்தனி 70 சதவீதம்

சாரங்கள்

அழகான குறிகளோடு கூடிய புதுத்தினுசுச் சாரங்கள் தனித்தனி 50 சதத்திலிருந்து ரூபா 1-50வரை

கம்பாயங்கள்

குறிகளுள்ள தினுசுகள் 40 சதத்திலிருந்து ரூபா 250 வரை

கிரேத் துணிகள்

முரட்டுப்பாவிப்புக்குச் சிறந்தவை; உடைக்குத் திருப்திகாமானவை×; எளிதில் வெள்ளையாகக் கூடியவை; விலைகள் யார் ஒன்றுக்கு 18 சதத்திலிருந்து 50 சதம் வரை.

லோங்குளோத்ஸ்

வீட்டுப்பாவிப்புக்குள்ள ஒவ்வொரு தேவைக்கும் விலைகள் யார் ஒன்றுக்கு 20 சதத்திலிருந்து 50 சதம் வரை

பிளீச் பண்ணாத பெட் ஷீட்டுகள்

54, ×80, சோடி ஒன்றுக்கு ரூ. 2-25
72, ×80, „ „ ரூ. 3-10

பிளீச் பண்ணிய பெட் ஷீட்டுகள்

54, ×80 சோடி ஒன்றுக்கு ரூபா 3-00
72, ×90 „ ரூபா 4-00

சில்லறை வியாபாரக்கடை, பெரியகடை, யாழ்ப்பாணம்

திசிலோன் ஸ்பின்னிங் அன்வீவிங் கம்பெனி லிமிடெட்டின்
முதலாவது மோர்ட்கேஜ்டிபெஞ்சர்கள் வைத்திருப்போருக்கு டிரஸ்டிகள்

Nethrananda Thailaya

Ceylon's Premier Curative Medicine Oil.

நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.
தபாற்கூலி 45 சதம்.

இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை கரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று ஊர்ந்தறிகிற ஒவ்வொரு சிறபின்னைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலைமயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற சிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—

வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னாண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—

பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்றோட், கொழும்பு—இலங்கை
காஸில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.
(H 332, 20-3-36 to 19-9-36)

கண்ணே பிரதானம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கில் பிறவுண்றோட் (நரியன் குண்டு) ரத்தினவாசத்தில் அமைக்கப்பெற்ற அமிர்தானந்த வைத்தியசாலையில் இப்போது நேத்திரத்திற்கு சிய சிகிச்சைக்கு வேண்டப்படும் ஔஷதங்கள் கருவிகளும் சேக்கப்பட்டிருத்தலால் வேண்டியவர்கள் காலை 7 மணி முதல் 10 மணி வரை வசதியாக ஆலோசனை செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். மற்றைய நோய்களுக்கு வேண்டிய சிகிச்சை முன்போல் நடைபெறும்.

வைத்தியசாலை
சொந்தக்காரர்
த. இராமலிங்கம்
வைத்தியர்

Address:—
Manager
Amirdananda Vaidyasalai
"Ratna Vasa" Brown Road
Vannarponnai
Jaffna (Ceylon)
Y2 6. 7-5-36 to 30-4-37 (வி)

விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

1	பத்தி (கலம்)	ரூபா	10-00
½	„ „	„	5-50
¼	„ „	„	3-00
1	அங்குலம்	„	1-00

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்பட மாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை

தலைவலியுற்றபோது

லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம் தைலத்தை

நெற்றியிலும் கன்னத்திலும் தேயுங்கள்

தலைவலி யுடனே மாறிவிடும்

அதுவுமன்றி இது இந்தியாவில்

இந்தியர்களாலேயே செய்யப்படுவது.

இத்தைலமே எல்லாவற்றிலும் சிறந்தது.

Y 44 1-1—31-12-36)

படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார்
நடுவன்மை நாணுபவர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna on Thursday, June 25th 1936.